மேழர்

# பனிமலையின் பூபாளம்

U

# பனிமலையில் பூபாளம்

"மருதம்"

அன்னை வெளியீட்டகம்
மருதமுனை

***Rs. 75/-***


TITLE OF BOOK: **PANIMALAIYIL POOPALAM**
(COLLECTION OF POEMS)

AUTHOR: "MARUTHAM"
( Dr. "JINNAH" SHERIFUDEEN )



COPYRIGHT: AUTHOR



PUBLISHED BY: ANNAI VELIYEETTAKAM
MARUTHAMUNAI

EDITION: FIRST EDITION NOVEMBER 1995

NUMBER OF COPIES: 1000

PRINTED BY: KLEEN PRINTERS

COVER DESIGNED BY: ROSHAN SHERIFUDEEN

இந்நூல்

என் இலக்கிய வாழ்வில்
என்றும் தோள்தரும்
இனியநற் சோதரர்
"காங்கிரஸ்" பத்திரிகையின்
நிருவாக ஆசிரியர்
"சத்திய எழுத்தாளர்"
எஸ்.ஐ.நாகூர் கனி
அவர்களுக்குச்
சமர்ப்பணம்.

மாண்புமிகு அமைச்சர்,
சௌ. தொண்டமான் அவர்கள்

## திறன்கண்டளித்த தகவுரை

இ. தொ. கா. வின் உத்தியோகபூர்வ ஏடான ''காங்கிரஸ்'' இதழ்களில் கவிஞர் ஜின்னா ஹ்ஷரிபுத்தீன் அவர்கள் ''மருதம்'' என்ற புனைப் பெயரில் எழுதி வந்த அருமையான கவிதைகளில் ஒருசிலவற்றைத் திரட்டி ''பனிமலையின் பூபாளம்'' என்ற பெயரில் ஒரு கவிதை நூலாக வெளியிடவுள்ளார் என்பதை அறிந்து நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

கவிஞர் ஜின்னா ஹ் ஷரிபுத்தீன் இலங்கையிலுள்ள விரல்விட்டு எண்ணக் கூடிய மரபுக் கவிஞர்களில் தலை சிறந்த ஒருவர். என்பதை நான் அறிவேன். கவிதைப் போட்டிகள் பலவற்றில் பங்குபற்றி அவர் பெரும்பா லும் முதல் இடத்தைப் பெற்று வந்திருக்கிறார். பல சந்தர்ப்பங்களில் விழாவுக்குத் தலைமை தாங்கும் அமைச்சர் என்ற முறையில், கவிஞர் ஜின்னா என் கரங்களிலிருந்தே பரிசில்களைப் பெற்றுமிருக்கிறார். கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்திய ஒரு கவிதைப் போட்டியில் அவர் முதல் இடத்தைப் பெற்று, என்னி டமிருந்தே முதற்பரிசை வாங்கிக்கொண்டது, இன்னும் என் நினைவில் இருக்கின்றது.

''பன்மலையின் பூபாளம்'' என்ற நூலில் இடம் பெற்றிருக்கும் இனிய கவிதைகள் இ. தொ. கா. வின் சேவைகள் பற்றியும், மலையகத் தமிழ் மக்களுக்கு நான் அளித்துவரும் தலைமையின் சிறப்பு பற்றியும், மலையக மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், அவர்களுடைய உள்ளத்தில் முகிழ்க்கும் உணர்வுகள் அவர்கள் எதிர் நோக்கும் கஷ்டநஷ்டங்கள் பற்றியும் அழகாகவும், ஆழ மாகவும், சிந்தித்து, உள்ளக் கிளர்ச்சி ஏற்படும் வண் ணம் படைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கவிதைகளுக்

காக அவர் ஏந்தவித சன்மானத்தையும் ''காங்கிரஸ்'' இதழிடமிருந்து பெற்றதில்லை. ஆர்வ மேலீட்டால் எல்லாக் கவிதைகளையும் அவர் பலனை எதிர்பார்க் காமலே எழுதியிருக்கிறார். என்பால் அவர் கொண் டிருக்கும் அன்பு என்னை நெகிழ வைக்கிறது.

கிழக்கு மாகாணத்தில், புகழ் பெற்ற ஒரு கவிஞ ராக விளங்கும் புலவர்மணி சரிபுதீன அவர்களின் மகனாக பிறந்து, பட்டம் பெற்ற டாக்டராக, ஒரு சிங்களக் கிராமத்தில் மருத்துவப் பணிபுரியும் இவர். மலையகத்தில வாழும் மக்கள் மீது எப்படி வாஞ்சை கொண்டார் என்பது சுவையான செய்தியாகும். இந்த விவரத்தை அவரே இந்நூலில் தமது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார் வாசகர்கள் படித்துச் சுவைக்க வேண்டிய விஷயம் அது.

கவிஞர் ஜின்னா அவர்கள் மேலும் பல கவிதை களையும், கவிதை நூல்களையும், படைத்து இலங்கை யின் முதன்மை பெற்ற கவிஞர் இவரே என்ற பெயரை யும், புகழையும் பெருமையையும், அந்தஸ்தையும் பெற வேண்டும் என்று, அவரை வாழ்த்துகிறேன்.

சௌ. தொண்டமான்



1989ம் ஆண்டில்

அகில இலங்கை ரீதியாக

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**

நடாத்திய புத்தகத் தேர்வில்

மருதத்தின் **"முத்துநகை"**

சிறந்த கவிதை நூலுக்கான

தேர்வு பெற்றபோது

**"மருதம்"**

பெருந்தலைவரிடமிருந்து

பரிசு பெறுகின்றார்.

# எனது சில வார்த்தைகள்

1942ம் ஆண்டு மலையகத்தின் உடத்தலவின்ன கிராமப்புறப் பாடசாலையின் தலைமை ஆசிரியராக எனது தந்தை புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன் அவர்கள் மாற்றலாகிச் சென்றார்கள். தந்தையாரோடு என் தாயாரும், மூத்த சகோதரியும், சகோதரனும் அங்குதான் வாழ்ந்தனர்.

1943ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் நான் பிறந்தேன். என் மலர்வும், மழலைக்காலமும் அந்த மலை மண்ணில்தான் கழிந்தன.

மீண்டும் என் சகோதரிக்குத் துணையாக என் மைத்துனர் கற்பித்த தெல்தோட்டைக் கிராமத்தில் வாழும் பாக்கியம் பெற்றேன்.

சுற்றியும் தேயிலைச் செடிகளின் பசுமைகொஞ்ச, இயற்கை எழில் மிகுந்த அப்பிரதேசத்தில் என் இளமைக்காலத்தின் சில வருடங்கள் மகிழ்வாகக் கழிந்தன

அக்காலை அண்டியுள்ள மலையகக் கிராமங்களுக்குச் சென்றுவரும் வாய்ப்புக்கள் எனக்குக் கிடைத்தன. தோட்ட லயங்களைத் தாண்டித் தாண்டித் தேயிலைச் செடிகளுக்கிடையே நெளியும் சிறுபாதைகளில் அடிக்கடி நான் போய்வருவேன்.

தோட்டத்து மக்களின் வாழ்வும் அவர்தம் துயரங்களும் என் பிஞ்சு மனத்தில் அன்றே பதிவாகிப் போயின. அவர்களின் வாழ்வை எண்ணி நான் வருந்தியதுண்டு.

கோணிச் சாக்கினைத் தலைக்கவசமாகவும், போர்வைகளாகவும் அணிந்துகொண்டு, பனிக்குளிரில் கூடை சுமந்து, கொழுந்து பறிக்க அவர்கள் சேர்ந்து வருவது கண்டு நான் சோர்ந்துபோன நிலைமைகளை இன்னும் நான் என் நினைவில் இட்டுப் பார்க்கின்றேன்.

வீட்டைச் சுற்றியுள்ள தேயிலைத் தோட்டத்தில்மும்மூன் றாய்த் தளிர்பறித்து அவர்கள் தோள்தொங்கும் கூடை களில் நானும் போட்டு மகிழ்ந்த பசுமையான நினை வுகள் இன்றும் என் நெஞ்சத்துள் பதிந்து கிடக்கின்றன:

மலையின் உச்சியிலிருந்து கீழ்நோக்கிச் செடிகளி டையே சுற்றிச்சுற்றி ஓடிவந்த இளமைக்கால அனுபவங் கள், இன்று இந்தக் கவிதைகளை எழுத எனக்குத் துணைநிற்கின்றன.

1990 ம் ஆண்டில் சிந்தாமணி நின்றுவிட்டபோது 1970ம் ஆண்டிலிருந்து என்னை வளர்த்துவந்த கவி தைக்களம் இல்லாது போயிற்று. ''ஜின்னாஹ்'' என்ற பெயரில் வேறு பத்திரிகைகளுக்கு எழுதும் எண்ணம் எனக்கிருக்கவில்லை. மீண்டும் என் மதிப்புக்குரிய ஞான குரு எஸ். டி. எஸ். அவர்களின் ஆளுமையில் வேறோர் பத்திரிகை வருமெனக் காத்திருந்தேன்.

எழுதாது இருக்கும் என்னை ஐயா ஒருநாள் அழைத்து தான் கௌரவ ஆசிரியராகவிருக்கும் இ.தொ. க. வின்'' காங்கிரஸ்'' பத்திரிகையில் எழுதும்படி பணித்தார்கள். ''மருதம்'' என்ற எனது புனைபெய ரும் அவர்களே தேர்ததாகும். கிழக்கு மாகாணத்தின் மருதமுனை என் சொந்த ஊர் என்பதால் ஐயா அவர் கள் அந்தப் பெயரைத் தேர்ந்திருந்தார்கள்.

அன்றிலிருந்து மருதத்தின் கவிதைகள் அடிக்கடி காங்கிரஸில் மலர்ந்தன. என் சொந்த மனக் கிளர்வு களின் பிரசவங்களாகவும் தேவைக்கு ஏற்ப அதன் நிரு வாக ஆசிரியர் 'காத்திபுல்ஹக்' அல்ஹாஜ் எஸ். ஐ. நாகூர் கனி அவர்களின் தூண்டுதலுக் கேற்பவும் கவிதைகள் பிறந்தன.

மருதத்தின் கவிதைகளை வாசகர்கள் விரும்பினார் கள் என்பதை அவ்வப்போது வந்து சேரும் கடிதங்கள் நிதர்சனம் செய்தன. அவற்றில் சிலவற்றை இத் தொகுப்பிலும் சேர்த்துள்ளேன்.

பெருந்தலைவர் தொண்டமான் அவர்களை நான் நன்கு அறிந்து வைத்திருந்தேன் ''தலைவர் தொண் டமான்'' என்ற ஐயா எஸ்· டி· சிவநாயகம் அவர்கள் எழுதிய தலைவரின் வரலாற்று நூலைப் படித்து முடித் தபோது எனக்கு அவர்மேல் ஏற்பட்ட அபரிமிதமான மதிப்பும், மரியாதையும் அவரின், எண்ணங்களை, அபி லாசைகளை, மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்னும் உணர்வை என்னுள் தூண்டின.

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக ஒரு சமுகத்தின் விடிவுக்காகப் பாடுபட்டுழைக்கும் தன்னிகரற்ற தலை வனாக நான் அவரை மதிக்கின்றேன். அந்த மாமனி தரை நான் மனமார நேசிக்கின்றேன்.

பசுமைப் புரட்சி செய்யும் தோட்டத்து மக்களின் வாழ்வு, கருகிவிடக்கூடாதென்று தன்னால் இயன்றதை யெல்லாம் செய்யும் அந்தத் தியாகமனங் கொண்ட பெருமகனின் கரத்தைப் பலப்படுத்த, என் கவிதை வரி கள் ஊட்டமளிக்கவேண்டும் என என்மனம் எண்ணியது.

நான் கருவுற்றது அந்த மலையக மண்ணில் என்ப தாலோ, மலையக மக்களைக் கருவாகக் கொண்டு பாடலெழுத எனக்குச் சிரமங்கள் தோன்றவில்லை. ஒவ்வொரு பொழுதும் நானும் மலையகத்தவன் என் னும் உணர்வு என் நெஞ்சத்தில் விஞ்சி நிற்கும்.

இத்தொகுப்பிலுள்ள சில கவிதைகள் தலைவர் தொண்டமானைப் பற்றியதாகவும், அன்றி அவரைத் தொடர்பு படுத்தியும் எழுதப்பட்டிருப்பதை சிலர் தவறாக எடைபோடுதல் சாத்தியமே. என்னை அறி யாத, நானறிந்த ஒருவரை, அவரது தூய பணிகளை எதிர்கால சந்ததியினருக்கு ஒரு ஆவணமாகத்தருவது அவர்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு படைப் பாளியின் கடமை என நான் எண்ணுகின்றேன்.

நான் சாராத ஒரு சமுகத்தின் தலைவனை நான் பாடுவது அவரைச் சார்ந்த ஒருவரால் பாடப்படுவதி

லும் உயர்வாக அமையும்: அப்போது அது வெறும் புகழ்ச்சியாகவல்லாது உண்மைக்குச் சாசனம் தருவதாக எதிர்காலம் எடைபோடும்.

கடந்த காலங்களை நோக்கும்போது மலையகத்தின் சரிதத்தில் தொண்டமான் என்னும் மகத்தான ஒரு சக்தியை எவராலும் தனிக்கவிட்டு எடைபோடுதல் சத்தியத்துக்கு விரோதமான ஒரு முயற்சியாகும்:

மானுடத்தை நேசிக்கும் ஒரு மனத்திற்கு, துன்புறுவோர் யாராக இருப்பிலென்ன அந்தத் துயரில் பங்கு கொள்ளும், அதற்காகக் குரலெழுப்பும், உரிமையைத் தானாக வரித்துக்கொள்ளும் கட்டாயம் ஏற்படுகின்றது அதன் பிரதிபலிப்பே இதிலுள்ள பல கவிதைகள். என் சிந்தனையிற் கருத்தரித்து எழுத்துக்களாகப் பிரசவமாகி இருக்கின்றன.

எனது இச்சிறு முயற்சியில் நான் வெற்றிபெறுவேனா என்பதை காலமே எடுத்துக்காட்ட வேண்டும்.

இறுதியாக என்னை ஒரு படைப்பாளியாக இனங்கண்டு கவிதைக் களம் தந்து வளர்த்து, பல கவிதைத் தொகுதிகளையும் காவியங்களையும் படைக்க உந்து சக்தியாய் திகழும் என் மரியாதைக்குரிய ஐயா எஸ். டி. சிவநாயகம் அவர்களுக்கும் இந்நூல் வெளிவரக் காரணமானவரும் ஆசியுரை தந்து என்னை வாழ்த்தியவருமான கண்ணியத்துக்குரிய பெருந்தலைவர் தொண்டமான் அவர்களுக்கும்.

என் இலக்கிய வாழ்வில் இணையிலாத் துணையாய் இருக்கும் என் அன்புக்குரிய சகோதரர் ''காத்திபுல்ஹக்'' எஸ். ஐ. நாகூர்கனி அவர்களுக்கும்

ஆய்வுரை தந்துதவிய தென்னகப் புலவர் மரியாதைக்குரிய சோம சிவப்பிரகாசம் எம். ஏ அவர்களுக்கும் வாழ்த்துக் கவி தந்த மரியாதைக்குரிய கவிஞர். கவிராஜயோகி கபிலவாணர் அவர்களுக்கும்.

அழகிய அட்டைப்படநிழலுருவம் தந்த பாணந்துறை ''தம்மிக ஸ்ரூடியோ'' உரிமையாளர் தம்மிகபெனரகல அவர்களுக்கும், எழுத்தணி செய்த என் மகன் ரோஷன் ஹமீதுக்கும். இதனை வெளியீடு செய்யும் மருதமுனை அன்னை வெளியீட்டகத்தாருக்கும், அழகிய வடிவில் நூலுருச் செய்த ''க்ளீன் பிரிண்டர்ஸ்'' அச்சகத்தாருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்: —மருதம்—

## பனி மலையின் பூபாளம் - ஒரு பார்வை

**கவிஞர் சோம சிவப்பிரகாசம்** எம். ஏ.

புதுக்கோட்டை தமிழ்நாடு

டாக்டர் ஜின்னா சரிபுத்தீன் அவர்கள் மருதம் என்ற புனை பெயரில் இயற்றியுள்ள கவிதைகள் பனிமலையின் பூபாளம் அன்று. இது ஒரு போர்ப்பரணி மட்டக் களப்பு பெரும் புலவர் ஆ. மு. ஷரிபுத்தீன் அவர்களின் அருமைப் புதல்வரே 'மருதம்'.

இலக்கியம் என்பது காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்றும், காலம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்குடையதென்றும் திறனாய்வாளர்கள் கூறுவர். கவிஞர் மருதம் அவர்கள் காலத்தையும் பிரதிபலிக்கின்றார். எதிர்காலத்தையும் கணிக்கின்றார். அறிவுரைகளை ஆணித்தரமாக எடுத்துக்கூறும் மருதத்தின் கவிதைகள், மலையக மக்களுக்கு மந்திரமாக மாறவேண்டும். திட்டவட்டமான தெளிவான நெஞ்சம் இவர் கவிதைகளில் தெளிவாகத் தெரிகிறது. மலையக மக்களை நேசிக்கும் மாண்பு தெரிகிறது. அவர்கள் வாழ்வு வளம்பெற வழி கூறும் பாங்கிலே மனித நேயம் பளிச்சிடுகிறது.

அப்பப்பா! கவிஞர் மருதத்திற்கு, மலையக மக்களின் மீது, அவர்தம் பிள்ளைகள் மீது எத்துணை பாசம்! எத்துணை அன்பு.

''பெற்றெடுத்த செல்வங்கள் படிக்கப் பள்ளி
பிறருக்குப் போலெமக்கும் வேண்டும்! ஆங்கே
முற்றும்புது வசதியோடு கல்வி ஞானம்
முறையாகப் பயில வழி செய்தல் வேண்டும்''

என்றும் பாடிவரும்

கவிஞர் நான்காம் அடியில்,

''பொற்புறுதல் வேண்டுமெங்கள் புத்திரர்கள்
புவி போற்றும் மனிதர்களாய் மாறவேண்டும்''

என்று பாடுகிறபோது எதிர்காலத் தேவையறிந்த சிந்தனை தெளிவாகத் தெரிகிறது. பாரதி கூட, ''கஞ்சி குடிப்பதற்கில்லார் அதன் காரணங்கள் இவை என்னும் அறிவும் இல்லார்'' என்று வருந்தினந்தானே ஏன்? அறிவு பெறாத சமுதாயம் விழிப்புணர்வுகொள்ள முடியாது. அதனால் தான் அறிவு வேண்டும் என்று பாரதி ஆசைப்பட்டான். பாரதி வழியில் புத்திரர்கள் புவி போற்றும் மனிதர்களாய் மாறுதற்குப் 'படிக்கப் பள்ளி பிறருக்குப்போல் எமக்கும் வேண்டும்' என்று கேட்கிறார்.

கவிதைகளின் தலைப்பாலும், கவிஞர் மருதம் பாரதியை நினைவுபடுத்துகிறார். 'காணி நிலம் வேண்டும்' நல்ல தலைப்பு

உழுது பயிரிடுவோர்க்கே - நிலம்
உரியது என்ற நிலைவர வேண்டும்
பழுதிலை நாம் பங்கு கேட்டால் - இங்கு
பசுமைப் புரட் சியைச் செய்த தெம் முன்னோர்

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களில் மிக முக்கியமானது தேயிலை. தேயிலைத் தோட்டங்கள் அழகாக உருவாக யார் காரணம் என்று எண்ணிப்பார் என்று மலையக மக்களை நெறிப்படுத்தும் கவிஞர் ஓர் அழகான உவமை கூறுகிறார்,

அழுத குழந்தைக்குத் தானே -- அன்னை
அமுது படைப்பாளென் றறிந்திட வேண்டும்
பொழுது தவறட விட்டால் -- பின்னர்
போனதை எண்ணி வருந்திட வேண்டும்

இது சரியான பொழுது என்கிறார் கவிஞர். இவ்வரிக்கு ஆயிரம் அர்த்தங்கள் கூறலாம். உள்ளபடி இது சரியான பொழுது என்பதனை அரசியல் பார்வையாளர்கள் அறிவர்.

'தேயிலையின் கொழுந்து தருகின்ற சாற்றில்
தெரிவதுந்தன் குருதிவண்ணம்'

ஆகா! என்ன நயமான வரி. நெஞ்சைத் தொடுகின்ற சுருதியன்றோ இவ்வரி.

குடி குடியைக் கெடுக்கும். குடிக்கெதிராகக் கொடி பிடிக்கும் கவிஞர் மருதம் 'கள்ளுக் குடிப்போம் வா' என்று தலைப்புக் கொடுக்கிறார். தலைப்பை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. வட்டார வழக்கில் மிக அருமையாகப் பாடுகிறார்.

'இப்பருந்தே குடிப்பத நான்
உட்டுட்டேன் எண்ணு - எங்க
இ. தொ. கா. தலைவர் மேலே
சத்தியம் பண்ணு'

செல்வர்கள் குடிப்பதற்கும், ஏழைகள் குடிப்பதற்கும் வேறுபாடு இருக்கிறது. செல்வர்க்குச், சேர்த்த செல்வத்தில் சிறிதளவே குறைகிறது. ஆனால் ஏழை மேலும் ஏழையாகிறான். 'காலையேனும் புடிச்சிக் கெஞ்சுவோம்' தோட்டத் தொழிலாளர் வாழ்வில் எத்துணை அக்கறை இருந்தால், இப்படிப் பாட முடியும். எண்ணிப்பாருங்கள்.

மலையகத்துப் பிள்ளைகள், சிறுவர்கள் கல்வி கற்றுயர வேண்டும் என்பதே கவிஞரின் அடிமனம்.

''அளவிலாத திருவிருந்தும் அறிவிலாதவர்
அவைமுதன்மை பெறுவதரி தாகுமே காண்பீர்!

செல்வமா? கல்வியா? கல்வியின் சிறப்பைப் பிஞ்சு உள்ளங்களில் நன்கு பதிய வைக்கிறார் கவிஞர் மருதம்.

"விமோசனம் வேண்டும்'' கவிதையின் சந்தந்தான் எத்துணை நயம்! தேனாய் இனிக்கிறது. சந்தங்கள் இவர்க்குச் சொந்தமோ?

ஒரு வேளை வயிராற உண்டிடப் போதாத
ஊதியம் தருவாரடா-இவர்
தெருவோரம் வீசிடும் எச்சிலைச் சேர்த்தாலே
ஒருவாரம் உணலாமடா!

பார்த்துப் பார்த்து அடைகாத்து வைத்திருந்த சமுதபயத் தீமை ஒருநாள் உணர்ச்சிப் பிரவாகமெடுத்து வெளி வரும்போது, சொற்கள் நெருப்பாக வரும்! எத்தனை செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கையைப் பார்த்தாரோ கவிஞர்! ஒழுங்கான நியாயமான ஊதியம் தராதவரால் தான் ஆடம்பரமாக வாழமுடியும். பொதுவுடமைச் சித்தாந்தம் பூமணக்கும் பாவாக வரும்போது இனிக்கிறது.

மலைமேவும் பனிதோய்ந்து மிளிர்கின்ற தளிர்காலை
மறைகின்ற நிலைபோலுமே - நாமும்
பலியாகப் பிறர்வாழும் பரிதாப நிலையாரும்
பாராத புறமாகுமே!

கொஞ்சிவரும் சொற்கள் கவிஞர் மருதம் அவர்களிடம் கெஞ்சி விளையாடுகின்றன. கவியரசர் கண்ணதாசன், இந்த வரிகளைப் படித்தவுடன் எனக்கு நினைவுக்கு வந்தார். அலைவரிசைபோல் சொற்கள் அழகாக அடுக்கி வருதல் கொள்ளை இன்பம். வற்றாத கவிதை ஊற்றுக்குச் சொந்தக்காரர் கவிஞர் மருதம் என்பதற்கு இவ்வரிகளே சான்று. இவைபோல எழுதிக் குவிக்கட்டும்! இதயங்கள் தமிழ்கேட்டு மலரட்டும்! புதுவாழ்வு பிறக்கட்டும்

இறுதியாக......! மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை சௌ. தொண்டமான் அவர்கள் மீது கவிஞர் மருதம் கொண்டுள்ள காதல் பல இடங்களில் பளிச்சிடுகிறது எனக்கு ஆழ்வார்களின் நாயகன் நாயகி பாவமே நினைவுக்கு வந்தது:

பொதுவாகவே கவிஞன் தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட்டால், அவனை யாராலும், எந்தச் சக்தியாலும் மாற்றமுடியாது. இதற்குச் சரியான எடுத்துக் காட்டு கவிஞர் மருதம்.

'அகத்தில் வாழும் அப்பத்தா'

''தொண்டு செய்தோர் ஒருநாளும் இறவார் ஒப்பத்
தொண்டமான் துணைவியின்னும் இறக்கவில்லை.''

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவ தில்லை
தமிழ்க்கவிஞன் பாரதிதான் செத்த துண்டா?

என்னை ஒப்பு நோக்க வைத்தது. இ. தொ. கா. மீது கவிஞர்க்கு உள்ள பற்றுத்தான் எவ்வளவு உயர்ந்தது.

சதிகாரக் கும்பலினால் இ. தொ. காவின்
சக்தியொன்றும் குன்றாதே! சென்றோ ராலும்
எதிராளிக் கென்னபயன்? ஒன்றும் இல்லை
இடம்பெயர்ந்து வீழ்ந்த சிகை போல்வார் அன்னார்

கவிஞருக்குத் துணிவு வேண்டும். சொல்வதைச் சொல்வது அறம் என்ற மனம் வேண்டும். 'இடம் பெயர்ந்து வீழ்ந்த சிகைபோல்வார்' என்று சொல்ல வேண்டுமானால் எத்துணை மனத் துணிவு வேண்டும். தலைவர் தொண்டமான் மலையகத்து மக்களுக்காகச் செய்த செயற்கரிய செயல்களை எண்ணிப் பார்க்கிறார். 'மலையகத்தின் காந்தி' என்று பட்டமே கொடுக்கிறார் அவரையும் சதிகாரக் கூட்டம் வீழ்த்த நினைக்கிறபோது, இதைவிட வேறு எந்தக் கொம்பனாலும் சொல்லமுடியாது என்பதுபோல் உச்சத்தில் நின்று முழங்குகிறார்.

பனி மலையின் பூபாளம் - தலைவர் தொண்டமானுக்குச் சூட்டிய புகழாரம் என்றே சொல்லலாம்.

கவிஞர் மருதம் அவர்கள் ஒரு தரமான மரபுவழிக் கவிஞர் என்பதை இந்நூல் மூலம் நிரூபிக்கின்றார். பரிசுகள் பலபெற்ற கவிஞரின் கவிதைகள், பாராட்டு நீரூற்றி உரமிட்டு வளர்க்கப்பெற்றவை. ஒவ்வொரு மலையகத் தமிழனின் கையிலும் இருக்கவேண்டிய நூல் 'பனிமலையின் பூபாளம்'

கவிஞர் மருதம் அவர்கள் நிறைய எழுதுவது மலையக மக்களுக்கு நல்லது. நிறைய எழுத வேண்டும் என்பது என் விருப்பம். வளர்க அவர்தொண்டு. வாழ்க அவர் புகழ்.

## வாழ்த்துப் பா

### கொள்கைமிகு ஷரிபுத்தீன்

பனிமலையின் பூபாளக் கவிதை நூலின்
பரப்பளவை மனத்துலையால் ஆய்ந்து பார்த்தேன்;
தனியான அழகுநடை புதிய வேகம்!
தமிழுணர்வும் சமுதாயப் பிடிப்பும் கொண்ட
கனிக்கவிஞர் இந்நூலைப் படைத்த தாலே
கவிஞர்களில் ஊருணியாய்ப் பயன்தந் துள்ளார்
நுனிக்கரும்பாய் இல்லாமல் அடிக்க ரும்பாய்
நூலமைத்த திறமுணர்ந்து போற்று கின்றேன்

ஜின்னாஷெர் புதீனுக்குச் சந்தம் செய்யும்
சித்துமிக்க கைவந்த நிலையும் கண்டேன்
தன்னுரிமை இழந்துநிற்கும் தொழிலா ளிக்கும்
தடம்புரண்டு மதுவருந்தும் மலையத் தார்க்கும்
அன்பாலே தாய்மொழியால் உருகு கின்றார்
அவர்வேலைக் கேற்றபடி கூலி பெற்று
மென்மையாக மகிழ்கின்றார் புதிய காற்றில்!
மேன்மேலும் மிகவுயர வாழ்த்து கின்றேன்

முற்றிநிற்கும் நெற்கதிர்போல் மூங்கி லைப்போல்
முதிர்நிலையை இவரெழுத்தில் காணுகிண்றேன்;
கற்றாழை வீட்டுக்குள் வளரும் காலம்
கதலியெனும் வாழையிவர் தேவை யன்றோ?
பற்றாலே சொல்லவில்லை எழுத்துக் காகப்
பாராட்டி வாழ்த்துப்பா சூட்டு கின்றேன்
கொற்கைமுத்து குளிருண்டு சொற்க ளுக்குள்
கொழுந்துவிட் டெரிமலையும் நிரம்ப உண்டு.

அப்பத்தா கவிதையிலே உவமை யெல்லாம்
அடுக்கிவைத்தும் அவலத்தைக் கொட்டி வைத்தும்
இப்பத்தான் தொழிலாளர் மறந்த ஒன்றை
இரங்கலுரை யால்கண்ணீர் பொழிய வைத்தார்;
தப்பாமல் கவிதைமழை பொழியும் மேகம்
தடங்கலற்றுப் பாயுநதி இவர்செய் பாட்டு
கொப்பளிக்கும் உணர்வுகளை அமுதாய் நல்கும்
கொள்கைமிகு ஷரிபுத்தீன் நீடு வாழி!

*கவிராசயோகி கபிலவாணன்*
*255, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,*
*வண்ணாரப்பேட்டை,*
*சென்னை – 600021.*
*தமிழ்நாடு.*

உள்ளே. . . :


| | | |
|---|---|---|
| 1; | புத்துலகைக் காண்போம். | 1 |
| 2; | மலையகத்து மாதருக்கு. | 3 |
| 3' | அனைவரும் இலங்கையரே. | 4 |
| 4; | நெறி பிறழாத் தலைவனைப்-<br>பின்தொடர்வோம். | 5 |
| 5; | அதிசய அற்புத மனிதர். | 6 |
| 6; | ஊன்றிப் பதியட்டும் கால்கள். | 7 |
| 7; | அகத்தில் வாழும் அப்பத்தா. | 8 |
| 8; | தலைநிமிர்ந்து வாழ்வோம். | 10 |
| 9; | நேர்மையாய் வாழ்வோம். | 11 |
| 10; | புகழ் பூத்த தலைவர். | 12 |
| 11; | விடிவைக் காண்போம். | 14 |
| 12; | பெருந் தலைவர் தொண்டமான். | 17 |
| 13. | பெருந் தலைவர் பிறந்த நாள். | 18 |
| 14; | சேமிக்கத் தொடங்குவீர். | 19 |
| 15; | காணி நிலம் வேண்டும். | 20 |
| 16; | எண்ணிப் பாராய் | 21 |
| 17; | உரிமை கோருவேம். | 22 |
| 18; | மலையகத்தோர் வாழ்வு பொங்க. | 23 |
| 19; | ஓட்டுப் போடுவோம். | 24 |
| 20; | தலைவரின் கையோங்கச் செய்வோம். | 26 |
| 21; | வெற்றி கொள்வோம். | 28 |
| 22; | சேவல் கூவுது. | 29 |

| | | |
|---|---|---|
| 23; | வெற்றிக் களிப்பு. | 30 |
| 24; | தருமத்தின் காவலன். | 31 |
| 25; | மதுவை வெறுத்திடு மலைமகனே. | 32 |
| 26; | நூறாண்டு வாழ்க ஐயா. | 33 |
| 27; | மயைகத்தின் காந்தி. | 35 |
| 28: | மலையகத்தின் புதிய காற்று. | 36 |
| 29; | சமாதானத் தூது செல்வோம். | 37 |
| 30; | வேலைக்கேற்ற கூலி. | 38 |
| 31; | தமிழொலிக்கும் தலமெல்லாம்-<br>தலைவா நீயே. | 40 |
| 32; | உறுதிமிக்க தலைவர். | 41 |
| 33; | ஆயிரம் பிறைகண்ட தலைவா. | 42 |
| 34; | போனால் போகட்டும் போடா. | 44 |
| 35; | கள்ளுக் குடிப்போம் வா. | 46 |
| 36; | தலைவர் கரம் ஓங்கச் செய்வோம். | 48 |
| 37; | காற்றுள்ள போதே. | 50 |
| 38; | பல்லாண்டு வாழ்க மாதோ. | 52 |
| 39; | நிமிர்ந்து நில். | 55 |
| 40; | மலையகத்தின் சிறுவர்களே. | 56 |
| 41; | தூயபணி செய்திடநீ துணிவு-<br>கொள்வாய். | 58 |
| 42; | தாய்க்குலம் கண்திறக்க வேண்டும். | 60 |
| 43; | விமோசனம் வேண்டும். | 62 |
| 44; | கோலோச்சும் குறிஞ்சியழகு | 63 |
| 45; | பசுந்தளிரின் பனிமுத்துக்கள். | 65 |
| 46: | பத்திரிகை படிக்க வேண்டும். | 67 |
| 47; | பனிமலையின் பூபாளம். | 69 |

## புத்துலகைக் காண்போம்

தத்துப்பிள்ளை பேலதாழ்ந்து
வாழ்ந்தகாலம் மாய்ந்ததின்று
இத்தரையில் வாழுமுரிமை
எமக்குமுண்டென் றெண்ணிடுவாய்
நித்தமும்நாம் பட்டதுயர்கள்
நீங்கியொளி பிறந்ததெனப்
புத்துலகைப் படைப்பதற்குப்
புறப்படுவாய் மலைமகனே

இத்தரையில் அடிமைகள்போல்
ஏனிருக்க வேண்டுமோ நாம்
அத்தனையும் பிறரைப்போல
அனுபவிப்போம் எழுந்துவா
அத்துமீறி வருபவனை
அடக்கநெஞ்சில் உறுதிகொள்
ஒத்துவாழும் உயர்ந்தபண்பு
உனக்கும்வேண்டும் அறிந்துகொள்!

சித்தமிது கொள்ளுநான்கு
தலைமுறைகள் நம்மவர்கள்
இத்தலஞ்சி றக்கவென்றே
இமைப்பிலாது ழைக்கிறோம்
எத்தரெமை ஏய்த்துவாழ்ந்தார்
இன்னுமிடங் கொடுப்பதோ?
புத்துலகைக் காண்பதற்குப்
புறப்படுவாய் மலைமகனே!

*காகிரங்ஸ் 15.12.89*

வித்தகர்கள் பற்பலரெம்
    மலையகத்திற் தோன்றிடநற்
புத்தியுள்ள சிறுவர்களின்
    படிப்பினுக் குதவுவோம்
எத்தனைதான் இடர்வரினும்
    எதிர்த்துநின்று வென்றுவுயர்
புத்துலகைக் காண்பதற்குப்
    புறப்படுவாய் மலைமகனே!

உத்தமநற் றலைவரெங்கள்
    ஓங்குபுகழ் தொண்டமானார்
புத்திகூர்மை மிக்கபெரும்
    பிறவிமேதை யானவர்
சத்தியத்தைக் கூறிவெற்றி
    சாரவைத்த பெருமகனின்
வித்தகத்தைப் போற்றிடுவேம்
    வீறுகொண்டு எழுந்துவா!

நத்தியெமை இருக்குதிந்த
    நாட்டின்பொரு ளாதாரம்
இத்தனைநாள் ஈதறியா
    திருந்துவிட்டோம் உணர்ந்துபார்
ஒத்தெமது சக்திதனை
    உலகறியச் செய்துவுயர்
புத்துலகைக் காண்பதற்குப்
    புறப்படுவாய் மலைமகனே!

காங்கிரஸ் 15.10.89

# மலையக மாதருக்கு

மலையகத்தில் வாழுகின்ற மாத ருக்கு
மனந்திறந்தோர் வார்த்தைசெல்வேன் கேட்பீர் நீங்கள்
இலைபறிப்ப தோடுபணி முடிந்த தாக
எண்ணியேவா ழாதிருக்க வேண்டாம் உங்கள்
குலந்தழைக்க வேண்டுமெனிற் பெற்ற மக்கள்
குவலயமே போற்றும்படி வாழ வேண்டும்
கலையனைத்துங் கற்றுயர வேண்டும் இந்தக்
காசினியில் அவர்பெருமை நிலைக்க வேண்டும்

அறுசுவையோ டுண்டிநமக் கில்லை ஆனால்
அறிவுபெறத் தடைசெய்வா ரெவரும் உண்டோ?
குறையில்லாச் செல்வமது வொன்று தானே
குழந்தைகளைக் கல்விபெற உந்து விப்பீர்
திறமையுள்ள வல்லுனர்கள் ஒவ்வோர் நல்ல
துறைகளிலுந் தோன்றவுங்கள் உதவி வேண்டும்
உறுதியென்றை இன்றிருந்தே நெஞ்சிற் கொள்வீர்
உயர்வான சந்ததிக்காய் உழைப்பீர் வெல்வீர்

சொந்தமென்று சொல்லவெரு சாணு மில்லை
சிறுகுடிசை வாழ்வன்றி மாற்ற மில்லை
நொந்தழுவ தாலொன்றும் நடப்ப தில்லை
நிலையான வெற்றிக்கோ முயற்சி வேண்டும்.
சந்ததியோர் கற்றவராய் இருந்தா லின்று
சாதிக்கப் பலவுண்டு அறிவி னாலே
சிந்தையிலே இவைகொள்வீர் நாமும் இந்தச்
செகம்போற்ற வழிகாணத் தோள்கொ டுப்பீர்

காங்கிரஸ் ***01.11.89***

## அனைவரும் இலங்கையரே

இந்தியரின் வம்சவழி என்றே இன்னும்
ஏனுன்னைப் பிரித்தெடுத்துப் பேசு கின்றாய்
''சொந்தமிந்த மண்ணெனக்கும்'' என்ற எண்ணம்
சேர்வதுந்தன் நெஞ்சத்தில் என்று தானோ?
விந்தையடா வாக்குரிமை வந்த பின்னும்
வேண்டுமென்றோ நீயதனைச் செப்பு கின்றாய்
இந்தியனென் றுனைநீயே சொல்லிக் கொண்டால்
எப்படித்தான் சமஉரிமை கேட்ப தாமோ?

வம்சவழி ஆய்ந்தறிந்தால் இங்கு வாழ்வோர்
வந்தவரின் பரம்பரைதான் அனைத்துப் பேரும்
வம்சத்தைக் கூறித்தமைப் பிரிக்கா திங்கு
வாழுகின்றோர் இலங்கையர்தாம் என்றே-
-உந்தன்
வம்சத்தை கூறியுனை இனங்காட் டாதே
வருகின்ற சந்ததிக்கும் அதனாற் கேடே
வம்சத்தால் நாமெல்லாம் இலங்கைத் தாயின்
வம்சமென எண்ணியுன துரிமை கோரு

இந்தமண்ணிற் பிறந்தவன்நீ இணைந்தே வாழும்
எண்ணத்தை மனதிற்கொள் எல்லோர் போன்றும்
சொந்தமிந்த நாடென்னும் உரிமை யோடே
தோள்கொடுத்தே அதுவுய்யச் சேவை செய்வாய்
சிந்தையிலே தூய்மைஇருந் துழைத்தால் தெய்வம்
சிறந்தபலன் காட்டிடுமே மறந்தி டாதே
முந்தியதை மறந்துவிடு மலைய கத்தின்
முடிசூடா மன்னன்நீ நினைவிற் கொள்வாய்

சிந்தாமணி 03.12.89

## நெறி பிறழாத் தலைவனைப் பின்தொடர்வீர்

அடிவாரத் திருந்தோவ்வோர் அடியாய் மேலே
  அடியெடுத்து வைத்துமலை மீது தாவி
பிடிபிடியாய் பசுந்தளிரைக் கொய்து தங்கள்
  பின்தொொங்கும் கூடைகளிற் சேர்ப்பீர் உங்கள்
நடைசோர்ந்தால் கைகளைத்தால் இந்த நாட்டின்
  நடைசோரும் நாவரளும் பொருளா தாரம்
குடைசாயும் என்பதனை நினைவிற் கொள்வீர்
  கொள்கையொன்றைக் கடைப்பிடித்தே வெற்றி-
                                        -காண்பீர்

பதித்தவுங்கள் பாதவடு பிறர்கா ணாது
  பசுந்தளிர்க ளால்மறைந்த போதும் மீண்டும்
பதிந்தவைகள் மலைமண்ணில் உரிமை கோரும்
  பக்குவத்தை ஏன்மறந்தீர் இந்த மண்ணில்
பதியவந்த பிரஜைகளே நீங்க ளென்றால்
  பரம்பரையாய் வாழ்வதெவர் கூறு வாரோ?
விதம்விதமாய் ஒவ்வொன்று சொல்வார் அந்த
  வீணருக்கு அஞ்சா(து)நெஞ் சுயர்த்தி வாழ்வீர்

மலையகத்து மாதர்களே துணிவு கொள்வீர்
  மனந்துணிந்து செயற்படுவீர் எதிர்கா லத்தில்
நிலையாக வதியவிடம் வேண்டு மென்ற
  நியாயத்தை எடுத்துரைப்பீர் இதுநா ளெல்லாம்
பலபேர்க்கோர் சிறுகுடிசை என்றே அஃதுள்
  பனிக்குளிரில் உடல்குறுக்கி ஒதுங்கி வாழ்ந்தீர்
நிலைமாறப் பாடுபடு வீர்க ளுங்கள்
  நெறிபிறழாத் தலைவனைப்பின் தொடர்ந்தே-
                                        -செல்வீர்

*காங்கிரஸ் 15.01.90*

## அதிசய அற்புத மனிதர்

அதிசயத்தின் அதிசயமாய் அற்புதத்தின் அற்புதமாய்
அளந்தறிய முடியாத ஆழி போலாய்
மதியூகம் மிக்கவுயர் மந்திரியாய் மாசற்ற
மனங்கொண்ட மாபெரிய தலைவர் கோனாய்
எதுவரினும் அஞ்சாது எதிர்கொள்ளும் வீரருமாய்
எல்லோர்க்கும் இனியமகன் என்னும் பேராய்
பொதுவாழ்வுக் கவர்தன்னை பொதுவாக்கிக்
-கொண்டபெரும்
புகழ்கொண்ட ஐயனுயர் தொண்ட மானே

நாணயம் மிக்கபெரு நாயகர் நம்பினோர்
நடுவழி விடாதவுயர் தலைவர் யார்க்குங்
காணமிக எளிமையாய்க் காணுமவர் கொள்கையில்
கடுகளவும் மாறாத கடமை வீரர்
வாணாளை மக்கள்தம் சேவைக்காய் வழங்கியவர்
வாஞ்சைமிகு மனங்கொண்ட கருணை வள்ளல்
பூணாது விடிலுமொரு முடிதலையி லவர்மலையின்
புகழ்கொண்ட மன்னரெனப் புகலு வாமே

போராட்டம் எனிலுமவர் புறங்காட்ட மாட்டாது
பொறுப்போடு வருகின்ற எதிர்ப்பை எல்லாம்
வேரொட்ட களைந்தெறிந் தேவெற்றி கண்டிடுங்
விவேகமிகு திறன்கெண்ட வெற்றி வீரர்
தூரோடு பகைமையைத் துடைத்தெறிந் தேபிறர்
துணைகொள்ள வருகின்ற விந்தை மனிதர்
யாரோடும் பகைகொள்ள மாட்டாத நல்லவர்
என்றென்றும் புகழ்கொண்ட தொண்ட மானே

காங்கிரஸ் 15.01.90

(திரு.எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் எழுதிய 'தலைவர்-தொண்டமான்' என்ற நூலின் ஒன்பதாம் பக்கத்தின்-பிரதிபலிப்பே இக்கவிதை)

## ஊன்றிப் பதியட்டும் கால்கள்

ஊன்றியுன் பாதங்கள் பதியட்டும் மலைகளில்
ஒவ்வொரு அடியுமோர் சரித்திரம் படைக்கட்டும்
தோன்றிடும் புதுப்புது உணர்வுகள் இளைஞரை
தோள்வலுக் கொண்டவ ராகவே உயர்த்தட்டும்

நாடற்ற பிரசைகள் நாமென்ற எண்ணங்கள்
நம்மவர் நெஞ்சிருந் தகன்றுமே ஓடட்டும்
காடெனக் கிடந்தவெம் மலைசெளித் தோங்கிடக்
காரணம் நாமெனக் காசினி உணரட்டும்

உன்னுடல் உதிரத்தில் வளர்ந்தவிப் பயிர்களில்
உனக்குமோர் உரிமையும் இருக்குதேன் அறிகிலாய்
பின்னொரு காலமும் வரும்வரு வாயினில்
பாடுப டுபவன் பங்கரை யாகுமே

கூலிக ளாயிங்கு வாழ்ந்தவர் நாமெனக்
கூறிடும் கூட்டத்தின் பூர்வீகம் என்னவோ?
நாலாக மடிந்தேவல் செய்தநாள் போயிற்று
நாமுமிந் நாட்டினின் பிரசையென் றோதுவோம்

காங்கிரஸ் 15.02.90

## அகத்தில் வாழும் அப்பத்தா

அப்பத்தா இறந்தாறு ஆண்டு ஆச்சோ?
  ஐயய்யோ! இல்லையில்லை அதுமெய் யென்று
ஒப்பத்தான் கூடிடுமோ வாழ்நாள் எல்லாம்
  ஓர்ந்தறிந்தே உதவிசெய்த தர்மத் தாயை
எப்போதும் நிறைந்திருப்பார் மலைய கத்தோர்
  இதயத்திற் தெய்வமெனில் பொய்யே இல்லை
தப்பாதே ஈதுண்மை பலநூ றாண்டு
  தாய்க்குலத்தின் மாதரசி வாழு வாரே.

பொன்விழாவைக் காணுமிந்த நாளி லந்தப்
  பெருமாட்டி தனைநினையா திருப்பா ருண்டோ?
பொன்மனத்துப் பெண்ணரசி பெருந்த லைவர்
  பிரியமிகு துணைவியவர் வெற்றிக் கெல்லாம்
பின்னிருந்தே ஊக்குவித்த சூத்ர தாரி
  பிரிந்தாலும் பிரியாது வாழும் அன்னை
பொன்னாலே சிலைவைத்துப் போற்றும் இந்தப்
  புவியவரை ஓர்நாள் ஈ துண்மை யாகும்

கார்முகிலின் வண்ணன்ஸ்ரீ ராம னுக்குக்
  கற்பரசி சீதைமனை யாளாய் வாய்த்தாள்
கார்வண்ணக் கோமான்மலை நாட்டின் மன்னன்
  கருணைமிகு 'கோதை'யைத்தன் துணையாய்க்-
                                        -கொண்டார்
பாராளும் பதியுவக்க வாழ்ந்தாள் சீதை
  பதியோடே உலகுவக்க வாழ்ந்தார் 'கோதை'
சீராளன் பெற்றபெருந் திருவே அன்னை
  செகவாழ்வைத் துறந்தாலும் வாழ்கின் றாரே

ஆவின்பா லோடுநறுந் தேனைப் போலும்
அழகுமணி யோடுமிகு ஒளியைப் போலும்
பூவோடு சேர்ந்தநல்ல மணத்தைப் போலும்
பொன்னோடு சேர்ந்தபிர காசம் பேலும்
'நாவாள்'கை வீணையோடு நாதம் போலும்
நல்லதமிழ்க் கவியோடு சுவையைப் போலும்
யாவிலுமே ஒன்றாகி அரைநூற்(று) ஆண்டு
இல்லறத்தை நல்லறமாய்க் காத்த தாயே

தொண்டுசெய்தோர் ஒருநாளும் இறவார் ஒப்பத்
தொண்டமான் துணைவியின்னும் இறக்கவில்லை
அண்டிவாழ் மனையாளாய் அல்ல அன்னார்க்(கு)
அசுரபலம் தந்திடுமோர் சக்தி யாக
தொண்டுசெய்யுந் தேவியென் றாக வல்ல
துணையாகக் காத்திருக்குந் தெய்வ மாக
இன்றுமவர் வாழுகின்றார் என்றும் வாழ்வார்
இறப்பில்லாப் பெருமாட்டி 'கோதை' அம்மாள்

காகிரங்ஸ் 15 . 04 . 90

('' தலைவர் தொண்டமான் '' என்ற நூலைப் படித்தபின் எழுந்த எண்ணங்களின் பதிவே இக்கவிதை)

★ கவிஞர் '' மருதம் '' எழுதிய ' அகத்தில் வாழும் அப்பத்தா ' கவிதை மலையக சமுதாயத்தின் நன்றி மறவாமைக்குரிய ஒரு அத்தாட்சி

திருமதி சொர்ணம்
ஹப்புத்தளை

## தலை நிமிர்ந்து வாழ்வோம்

தொடராகக் கட்டிய சிறுவீட்டில் வாழ்ந்தாலும்
துணிவோடு வாழ வேண்டும்
இடர்செய்ய வருபவர்கள் எவரெனினும்
- அவரைமுன்
எதிர்த்திடும் துணிவு வேண்டும்
பிடிசோற்றுக் கேனும்வழி இல்லாத போதிலும்
பிறர்க்(கு)அஞ்சா நிலையும் வேண்டும்
அடிபற்றி வாழ்ந்தவர் அடிபற்றி வாழும்நாள்
அருகிலென உணர வேண்டும்

0 0 0

உழைப்பினுக் கேற்றநல் ஊதிபம் பெற்றிட
ஒன்றித்து முயல வேண்டும்
உழைப்பிலா திருப்பவர் உழைத்திடத் தொழில்
- பெற
உதவிகள் செய்ய வேண்டும்
உழைக்கவே இயலாத காலத்தி லே ஓய்வு
ஊதிபம் கிடைக்க வேண்டும்
உழைப்பவன் உலகினுக்(கு) உயிர்தருவோன்எனும்
உண்மையை உணர்த்த வேண்டும்

0 0 0

மலைமீது வாழுபவன் மனங்களில் இலட்சியங்கள்
மலைபோல இருக்க வேண்டும்
குலையாத கொள்கைஅணு குறையாத உறுதிதலை
குனியாத நிலையும் வேண்டும்
அலைபோல துன்பங்கள் அடுத்தடு(து)அண்டிடினும்
அஞ்சிடா தெதிர்க்க வேண்டும்
தலைவர்களின் தலைவரெனுந் தலைவரின்
- தலைமையில்
தலைநிமிர்ந்(து) உயர்ந்து வாழ்வோம்

காங்கிரஸ் 01 . 06 . 90

# நேர்மையாய் வாழ்வோம்

நேர்மையை நெஞ்சத்தில் நிறைத்திடு அதன்படி
நெறிதவ றாது வாழ்வாய்
சீரான கொள்கைவழி செல்பவன் தானடா
செகத்தினில் உயர்ந்த மனிதன்
யாருனை எதிர்த்தாலும் எதிர்த்துநில் வீரனாய்
எவருக்கும் அஞ்சி டாதே
வீரத்தில் விளைந்தவோர் வித்தெங்கள் தலைவனின்
வெற்றிவழி தொடரு வாயே
0 0 0
செய்கின்ற செய்கையில் சிறிதேனும் அநீதிநீ
சேர்ந்திடா(து) ஒழுகு உந்தன்
துய்யவழி தனைப்பிறர் தெடருவார் நெஞ்சிலே
துணிவினைக் கொண்டு வாழ்வாய்
மெய்யாக நேர்மையும் மிகையிலாத் தீரமும்
மேருபேல் உயர்ந்த மனமும்
வையகத்(து)உயர்வர லாற்றிலெம் தலைவனை
வரித்திடும் மறந்தி டாதே
0 0 0
நமதுவழி தனித்தது நம(து)உயர் தலைவனை
நம்பிநாம் செல்லு கின்றோம்
சமமாகப் பிறரோடு சார்ந்துநாம் வாழுவோம்
சண்டைசச் சரவை நம்போம்
எமைச்சீண்ட வருபவர் எவராகி லும்அவர்
இடுப்பொடித்(து) அடக்கி வைப்போம்
நமைநாமே அன்றிஎவர் நமைக்காப்ப ரோபிறர்
நலம்பேணி நாமும் வாழ்வோம்

★ நம் தலைவர் தொண்டமானின் சிந்தனைகளை 'மருதம்' அழகாக கவிதையாக்கி விடுகிறாரே கவிஞருக்கு நன்றிகள். எம். கே. அர்ச்சுனன், மாத்தளை.

காங்கிரஸ் 01.07.90

# புகழ் பூத்த தலைவர்

பெரிசுந்த ரம்பிள்ளை நாட்டில் வாழும்
 பிறப்பாலே இந்தியரின் வம்சத் தோர்க்கு
உரிமையெலாம் வேண்டுமெனப் பாடு பட்ட
 உத்தமநற் புருஷரென நினைவு கூர்வோம்
சரிசமமாய்ப் பிறர்போல மலைநாட் டாரும்
 சகலதுமே பெற்றுயர வேண்டு மென்றே
அறைகூவி னார்அன்று தொழிலா ளர்க்காய்
 அமைப்பொன்றுந் தொடங்கியதை -
 நடாத்திச் சென்றார்

0 0 0

தோட்டத்துக் கங்காணி பெற்ற பிள்ளை
 துணிவுமிக்க தொண்டரவர் மலையின் மைந்தர்
தோட்டத்தின் சிறியதொரு பள்ளி தன்னில்
 தொடங்கிப்பின் கல்விக்காய் லண்டன் சென்றார்
நாட்டினுயர் நீதிமன்ற வழக்கு ரைக்கும்
 நற்கல்வி பெற்றுயர்ந்தார் இருந்து மென்ன
பாட்டாளி துயர்கண்டு துடிது டித்தார்
 பகலிரவாய் அவருயரப் பாடு பட்டார்

0 0 0

சட்டத்தில் வல்லவராய் இங்கி லாந்தில்
 சொந்தமண்ணாம் ஈழத்தில் தொழில்பு ரிந்தார்
சட்டத்தைக் கற்பிக்கும் ஆசா னாகச்
 சார்ந்துமொரு காலமவர் வாழ்ந்தார் ஆள்வோர்
இட்டத்தின் பயனாகச் செனட்ச பையில்
 இடம்பெற்றார் இந்தியரின் சார்பாய் -
 வாழ்வில்
பட்டாலுந் துயரம்தன் மக்கட்க் கென்றோ
 பாடுபட்டார் பார்போற்றப் புகழுங் கொண்டார்

இலங்கைவங்கி உருவாகக் கார ண(ர்)ராய்
இருந்தவரும் இவரேதான் பொருளா தாரம்
துலங்குதற்காய் அவர்கொண்ட நன்மு யற்சி
தொடர்ந்தின்றும் நாட்டினுக்கு உதவு தன்றோ
விலங்கறுத்துச் சுதந்திரராய் ஆகு முன்னே
விவேகத்தோ(டு) அரசியலில் புகுந்தார்-
நாட்டோர்
நலங்காக்கப் போட்டியிட்டு வென்றார் நாட்டின்
நல்லமைச்ச ராகவுமே சேவை செய்தார்

0 0 0

மலையகத்து மக்களுள்ளம் கவர்ந்த மேதை
மனிதருளோர் மாணிக்கம் மக்கள் சேவை
தலையாய கடமையெனக் கொண்டு வாழ்ந்த
தலைவருயர் இலட்சியங்கள் கொண்ட தீரர்
நிலையாக மனங்களுள்ளே நிலைத்தி ருப்பார்
நேர்மைக்காய்ப் பாடுபட்ட நெறியி னாலே
பலன்நோக்கா தவருழைத்தார் பாட்டா ளிப்பேர்
பலன்பெற்றார் பாருள்ள வரையும் வாழ்வார்

காங்கிரஸ் 23. 7. 90

## விடிவைக் காண்போம்

கந்தலெங்க ளுடைமானங் காக்கும் போர்வை
  கையளவு தான்நாங்கள் வாழும் இல்லம்
சொந்தம்மிக எங்களுக்குப் பஞ்சம் நோய்கள்
  சேர்ந்துடலோ டொன்றிவிட்ட துணைகள் மிக்க
பந்தமொடு தொடர்ந்துஉடல் வாட்டு கின்ற
  பட்டினியும் பசிப்பிணியுங் கால மெல்லாம்
வந்துறுத லன்றியேவே றென்ன கண்டோம்
  வகையற்ற வாழ்விதற்கு விடிவும் உண்டோ

முயற்சியிலே குறையொன்றும் இல்லை நாட்கள்
  முழுவதுமே உழைக்கின்றோம் உழைத்தே ஓய்ந்த
அயற்சியற உறங்கிடினும் அழைப்பொ லிக்க
  அதிகாலை மீண்டெழுந்தெம் பணிக்காய்ச்-
செல்வோம்
உயற்சியென்ப தில்லையெங்கள் வாழ்வில் யாரும்
  உணர்ந்ததனைப் பார்ப்பதில்லை ஓர்ந்தால்
என்றும்
துயர்ச்சுமைதான் எங்களுக்குச் சொந்தம் என்றே
  தொடருமெங்கள் வாழ்வினுக்கு விடிவும் -
உண்டோ

காலையிலே எழுந்தெங்கள் கடமைக் கேகக்
  கடுங்குளிரால் உடல் நடுங்கிக் குறுகிப் போக
மாலைவரை மனந்தளரா தொன்று சேர்ந்து
  மலையேறித் தேயிலையின் தளிர்ப றித்து
ஆலையிலே சேர்த்ததன்பின் தானே எங்கள்
  அகப்பணிகள் ஒவ்வொன்றாய் நிறைவு -
செய்வோம்
பாலைநிலம் போலெங்கள் வரண்ட வாழ்வு
  பசுமைபெறுங் காலமென்று வருமோ சொல்வீர்

பற்றைத்தளிர் பனிநீரிற் குளித்து நிற்கும்
பசுமைமிகு வனப்பெங்குங் கொஞ்சுஞ் சாரல்
சுற்றிவரத் தோன்றுமெங்கள் முயற்சி யாலே
சுகிப்பதன் பலனைச்சிலர் எங்கள் வாழ்வோ
வற்றாத சுனையிடையே வேர றுந்து
வாடுகின்ற பங்கயத்தைப் போலாம் இந்தத்
தொற்றும்பிணி தொடர்ந்தெங்கள் சந்த திக்கும்
தொடராது வழிகாண விளைவா ருண்டோ

நாட்டினது வருமானம் எங்கள் கையில்
நாடறியும் நாமறியா திருப்ப தேனோ
தோட்டத்துக் கூலிகளென் றெம்மை மற்றோர்
தூற்றஇடம் ஏன்கொடுக்க வேண்டும் நம்மால்
ஈட்டுகின்ற பெரும்பொருளைக் கொண்டு தானே
இங்குள்ளோர் வாழுகின்றார் எமைப்பு கழ்ந்தே
ஏட்டினிலே எழுதிவிட்டாற் போதா தெங்கள்
இன்னலிடர் அகலவுல குதவ வேண்டும்!

பெற்றெடுத்த செல்வங்கள் படிக்கப் பள்ளி
பிறருக்குப் போலெமக்கும் வேண்டும் ஆங்கே
முற்றும்புது வசதியோடு கல்வி ஞானம்
முறையாகப் பயிலவழி செய்தல் வேண்டும்
கற்றறிந்த திறமைமிக்க உபாத்தி யாயர்
கற்பிக்க வேண்டுமதன் பலனாய் வாழ்வு
பொற்புறுதல் வேண்டுமெங்கள் புத்தி ரர்கள்
புவிபோற்றும் மனிதர்களாய் மாற வேண்டும்

கல்வியொன்று தான்எம்மை உயர்த்தும் வாழ்வின்
கடைநிலையில் இருந்தெம்மைத் தூக்கும் ஒன்றும்
இல்லையென்ற நிலைமாற்றி வாழ வைக்கும்
எவருக்குஞ் சிரந்தாழ்த்தா திருக்கச் செய்யும்
எல்லையில்லா எமதுமனச் சுமைக ளெல்லாம்
இரவிகண்ட பனிபோல மறைந்து போகும்
புல்நுனியின் துளிநீருக் கொத்த வாழ்வு
புறங்காணப் புதுவாழ்வு பொலியுந் தானே

தலைதாழ்த்தி வாழ்வதினி இல்லை எங்கள்
தலைவனுக்கே பிறரெவர்க்கும் பணிவ தில்லை
நிலையாக வாழவெமக் குரிமை யுண்டு
நிர்க்கதியாய் வாழ்ந்தநிலை மாறிற் றின்று
இலையெவரும் இலங்கைக்கு உரிமை கோர
எல்லோரும் வந்தவரின் பரம்ப ரைதான்
மலைநாட்டின் மன்னவர்கள் நாமென் றெண்ணி
மனந்துணிந்து மானத்தோ டிங்கு வாழ்வோம்

நமக்கென்றோர் வாழ்வுண்டு உரிமை உண்டு
நம்கடமை என்றொன்றும் உண்டு மற்றோர்
தமகென்று வாழ்ந்தஒரு காலம் மாறித்
தத்தமக்கு மாகவின்று உழைக்க வேண்டும்
சமமாகப் பிறரோடின் நாட்டில் வாழும்
சமூகமெனும் உரிமைதனை மதிக்க வேண்டும்
எமதுயிராய் இந்நாட்டை எண்ணி நாளும்
இயன்றவரை பாடுபட வேண்டும் நாமே

இன்றெமக்கும் இந்நாடே தாய்நா டென்னும்
எண்ணமெம துள்ளத்தில் ஊன்ற வேண்டும்
ஒன்றுபட்டு வாழுமுய ருணர்வு வேண்டும்
ஒருவருக்கும் அஞ்சாத உறுதி வேண்டும்
சென்றழிந்த துயர்நிறைந்த வாழ்வையெண்ணி
சிந்தித்தே செயல்படவும் வேண்டும் அஃதை
பின்னரெங்கள் சந்ததியர் கண்டே தாமும்
பின்பற்றித் தொடர்கின்ற வழியைக் காண்போம்.

1987ல் ' குன்றின்குரல் ' கவிதைப் போட்டியில்
மரபுக் கவிதைப் பிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

# பெருந்தலைவர் தொண்டமான்

தலைவனுக்கு இலக்கணமாய் தலைவர்க்கெல்லாந்
தலைவரெனுந் தகுதிக்குந் தகுந்த பேராய்
மலைவாழும் மனுக்குலத்தின் மனத்தில் வாழும்
மறுவில்லாப் பேரொளியாய் எதுவந் தாலும்
நிலைகுலையா தெதிர்த்துவெல்லும் நெஞ்சத்தோடு
நீதிக்குத் தலைவணங்கும் பண்பி னோராய்
இலையொருவர் இவர்தவிர வேறு என்னும்
இணையில்லாப் பெருமகனே தொண்ட மானே

வம்சத்தில் இந்தியர்கள் என்றா லென்ன
வாழுகின்ற தொன்மையினால் ஈழத்தோரோ
நம்சொந்தம் நாம்வாழும் நாடு இங்கே
நாடற்றோர் எனும்பேச்சுக் கிடமே ஏது
இம்சைகளைப் பொறுத்திருந்த நாட்கள் போதும்
இனியெவரும் எமைப்பழிக்கஇயலா தென்ற
தம்கொள்கை தனைக்கொண்டு வெற்றி கண்ட
தலைவர்பெரு மகனவரே தொண்ட மானே

எழுபத்து எட்டென்ன எண்ப தென்ன
இன்னுமத னோடுபத்துச் சேர்ந்தா லென்ன
பழுதில்லா மனத்தாலே இளமைக் கோலம்
பார்ப்பவரைக் கவர்ந்திழுக்கும் மேதா விலாசம்
முழுதுந்தமைப் பிறர்சேவைக் கர்ப்ப ணித்த
பெருமனத்தால் புகழுக்குப் பெருமை சேர்த்த
வழுவில்லாக் கொள்கைகளின் முதன்மைச் செல்வன்
வழிபிறழாப் பெருமகனாம் தொண்டமானே

பாடுபட்டு உழைக்கின்ற பாட்டா ளிக்கும்
பதவியிலே உயர்ந்தவர்க்கும்; படித்தவர்க்கும்
ஏடறியாப் பாமரர்க்கும்; இனத்தால் வேறு
என்றாலும் அன்னவர்க்கும்; இங்கு எங்கள்
நாடாளும் அரசியலில் அனைத்துப் பேர்க்கும்;
நமதண்டை; தூரபிற நாட்டி னோர்க்கும்;
தேடாது கிடைத்தவுயர் நண்ப ரெங்கள்
திறமைமிகு தலைவர்திரு தொண்டமானே.

காங்கிரஸ் 30-8-90

**தலைவர் தொண்டமானின் 78 வது பிறந்தநாள் "காங்கிரஸ்" மலரில் பிரசுரமானது**

## பெருந்தலைவர் பிறந்தநாள்

எழுபத்து எட்டாண்டுப் பெருவி ழாவை
  எண்ணுகையில் அப்பப்பா என்னே இன்பம்
பழுதில்லாத் தலைவன்மேற் பக்தி கொண்டோர்
  பார்க்குமிடம் அத்தனையும் நிறைந்தே நின்று
தொழுதுஅவர் பாதத்தில் வீழ்ந்த காட்சி
  திருமாலே வந்தாங்கு உறைந்தாற் போன்றாம்
எழுதவொரு மொழியிலையே இவற்றை எல்லாம்
  இப்படியும் உண்டாமோ? எனவி யந்தேன்

ஆளுயர மாலையிட்டார் அணிவ குத்தே
  அழகுமலர்ச் சரங்களினால் உடல்ம றைத்தார்
தோளோடு தோள்நின்று தொழிலாளர்க்காய்த்
  துயருற்ற தலைவனைத் தம் அன்பால் வென்றார்
நாளெள்லாம் குதுகலித்து மகிழ்ந்தார் அன்று
  நமக்குமின்று பிறந்ததிரு நாளே என்றார்
நீளநெடுங் காலமின்னும் வாழ்க வென்றே
  நிரைநிரையாய்ப் பாதமலர் வீழ்ந்திட்டாரே

ஒன்றல்ல இரண்டல ஒருநூ றல்ல
  ஓரிரண்டு ஆயிரமோ அல்ல அல்ல
கண்காணும் இடமெல்லாங் கண்ட தந்தக்
  கார்வண்ணத் தலைவன்திரு உருவந்தானே
ஆணென்ன பெண்ணென்ன குழந்தை யென்ன
  அனைவருமே தமைத்தொண்ட மானாய் எண்ணி
வாணாளில் முன்னென்றுங் காணா வாறு
  வாஞ்சைமிகக் கொண்டுமகிழ்ந் திருந்தார்-
கண்டேன்
மண்கண்ட வரலாற்றுப் புருட ருள்ள
  மகான்காந்தி, மண்டெல்லா மாட்டின் லூதர்
விண்அண்டப் புகழ்கொண்டோர் வேறுண்டாயின்
  வேந்தரெங்கள் தொண்டமானே அன்றி இல்லை
புண்ணுண்ட மனங்களுக்கு மருந்தாய் மாறிப்
  பெருந்துன்பந் துடைத்தவரை நெஞ்சு யர்த்தி
மண்மீது வாழவழி கண்ட செம்மல்
  மாபெரியோன் மலையகத்தின் மன்னன்வாழி,

காங்கிரஸ்  1-10-90

# சேமிக்கத் தொடங்குவீர்

தேடிடும் பணத்திலே ஒருசிறிது- நீ
சேர்த்துமே வையடா குடித்துவிட்டே
ஆடிடும் ஆட்டத்தில் கண்டதென்ன - மிக
அற்பத்தில் ஆயுசு அழிவதன்றோ
தாடியும் மீசையும் நரைக்குமட்டும்- மலைத்
தமிழனே! உழைத்திட்டாய் மிச்சமுண்டோ
பாடுப டுவதில் நன்மைபெறச்- சற்றே
பக்குவ மாய்க்கொஞ்சம் சேர்த்துநீவை

நாளுக் கொருரூபாய் சேர்த்தெடுத்தால்- இங்கு
நாலுபே ருள்ளவோர் குடும்பத்திலே
ஆளுக்கு முப்பதென் றாகிவிடும்- கூடி
ஆண்டுக்கு ஒன்றரை ஆயிரமாம்
வேளைக்கு உவும்நீ கடன்வாங்கி- தினம்
வேதனைப் படுகின்ற நிலைமாறும்
பாழும் வறுமையும் நீங்கிவிடும்- நம்
பரம்பரை யோர்க்குமோர் விடிவுவரும்

குடிப்பவன் குடிப்பதை நிறுத்திடணும்- அவன்
குடும்பமும் அவன்வழி திருந்திடணும்
படிப்பவர் தொகையிங்கு பெருகிடணும்- பள்ளி
பார்க்கு மிடமெல்லாந் தோன்றிடணும்
அடிப்படைத் தேவைபொ ருள்அதனால்- நாம்
அனைவருஞ் சேமிக்கத் தொடங்கிடணும்
கிடைப்பதில் சேர்ப்பதன் நன்மைதனை- எங்கள்
கீர்த்திசேர் தொண்டமான் சொல்லி வைத்தார்

காங்கிரஸ் 1-11-90

## காணி நிலம் வேண்டும்

வாழும் உரிமைகள் பெற்றோம் - நாம்
வந்தவர் எனும்பெருங் குறைகளைந் திட்டோம்
ஏழைச் சமூகமென் றெம்மை - இனி
எவரும் அழைத்திட இடந்தர மாட்டோம்

0 0 0

பாழும் வறுமையும் நீங்க - நாங்கள்
பணத்தினைச் சேமிக்கும் பக்குவம் பெற்றோம்
கூழைக்குடித்திட்ட போதும் - குடி
கெடுத்திடுங் குடிவெறுத் தேசிறந் திட்டோம்!

0 0 0

காணி நிலமெமக் கில்லை - மலைக்
காட்டை அழித்துத் திருத்தியோர் நாங்கள்;
வீணில் உறங்கிட வேண்டாம் - வாழ
வீடும் நிலமும் வேண்டிப் பெறுவோம்!

0 0 0

உழுது பயிரிடு வோர்க்கே - நிலம்
உரியது என்ற நிலைவர வேண்டும்!
பழுதிலை நாம்பங்கு கேட்டால் - இங்கு
பசுமைப் புரட்சியைச் செய்ததெம் முன்னோர்!

0 0 0

அழுத குழந்தைக்குத் தானே - அன்னை
அமுது படைப்பாளென் றறிந்திட வேண்டும்
பொழுது தவறிட விட்டால் - பின்னர்
பேர்னதை எண்ணி வருந்திட வேண்டும்.

காங்கிரஸ் 15-11-90

## எண்ணிப் பாராய்

உன்னைநம்பித் தானிந்த நாடு இன்னும்
உள்ளதிதை ஏன் மறந்தாய் மலைய கத்தோய்
தன்னருமை அறியாதேன் வாழு கின்றாய்
தலைநிமிர்ந்து நிற்பதுநாம் உன்னா லன்றோ?
என்னஎவர் சொன்னாலும் எதிர்த்திட் டாலும்
ஏழ்மையுனை வாட்டிவதைத் தாட்டிட் டாலும்
மன்னனடா நீயிந்த மண்ணின் மைந்தன்
மறக்காதே இதையெண்ணி எழுந்து வாராய்

0 0 0

தேயிலையின் கொழுந்துதரு கின்ற சாற்றில்
தெரிவதுந்தன் குருதிவண்ணம் உனது முன்னோர்
ஓயாத உழைப்பளித்த பலனே குன்றின்
ஒவ்வொருசாண் முழத்தினிலுந் தெரிவ திஃதை
நீயாக உணராது விட்டா லென்ன
நியாயமடா நெறிகெட்டோர் உன்னைச் சாட
வாயில்லாப் பிராணியென வாழு கின்றாய்
வல்லவுந்தன் தலைவனைப்பின் தொடரப் பாராய்

0 0 0

தாழ்ந்தஇனம் என்றுன்னை எண்ணி டாதே
தவறதுநீ தானுயர்தொ ழிலாளி வர்க்கம்
வாழ்வதிந்த உலகுதொழி லாளி கையில்
வர்க்கத்தில் அவனுயர்ந்த சாதி யுண்மை;
ஏழ்மைக்கேன் அஞ்சுகின்றாய் எல்லோர் போன்றும்
இருக்கின்ற உரிமைகளை ஏன்ம றந்தாய்?
தாழ்பணிய வேண்டாம்நீ தரும மோர்நாள்
தப்பாது வெல்லும்நீ முயல வேண்டும்!

சிந்தாமணி 1991

# உரிமை கோருவோம்

தோட்ட மெங்கணும் மாடி வீடுகள்
தோன்ற வேண்டுமதில் நாங்கள் வாழணும்
ஓட்டை 'லயங்களில்' உருளும் வாழ்க்கையும்
ஒழிய வேண்டுமெம் உரிமை தேறணும்
பாட்டொடு நல்ல பண்ணொ லிக்கணும்
பார்க்கு மிடமெலாம் மகிழ்வு பொங்கணும்
நாட்டை உயர்த்திடும் நம்ம வர்நிலை
நாளும் பொழுதுமே நன்றாய் மாறணும்.

ஒற்றை அறையினில் ஒருகு டும்பமே
உறங்கி னோமினி உயர்வு காணுவோம்
மற்ற வர்தமைப் போல நாங்களும்
மனித தேவையைக் கேட்டு வாங்குவோம்
முற்று மெமதுழைப் பாலே மலையகம்
முழுதும் பசுமையாய்த் துலங்கு தினியுமேன்
வெற்று மனிதராய் வாழ வேண்டுமோ
வீறு கொள்ளுவோம் வெற்றி காணுவோம்

நாலு பேரைப்போல் நாமும் வாழணும்
நாதி யற்றநிலை நமைவிட் டோடணும்
காலம் மாறினால் கருத்தும் மாறணும்
கடமை செய்தெங்கள் தனிமை காக்கணும்
சீலம் மிகுந்தவெந் தலைவ ராணைகள்
செயலு ருப்பெறத் தினமு ழைக்கணும்
நாலுந் தெரிந்தவ ராக அனைவரும்
நல்ல அறிவினைத் தேடி யடையணும்

காங்கிரஸ் *15-1-1991*

கவிஞர் 'மருதம்' எழுதிய 'உரிமை கோருவோம்' கவிதை வழமை போல படிக்கப் படிக்க சுவையாக இருந்தது கவிஞருக்கு எனது நன்றிகள். மா. சின்னத்தம்பி-அவிசாவளை

## மலையகத்தோர் வாழ்வுபொங்க

பொருளில்லா மலையகத்தோர் வாழ்வு பொங்கப்
பொருளுதவி செய்திடுதல் வேண்டும் நல்லோர்
அருள்கொண்ட நெஞ்சங்கள் கனிந்தால் வாழ்வின்
அல்லல்கள் நீங்கியவர் இன்பங் காண்பார்
இருளான அவர் வாழ்வில் ஒழியும் வேண்டும்
இன்னல்கள் அத்தனையும் நீங்க வேண்டும்
சரியான காலத்தில் உதவி னாலே
தர்மத்தில் உயர்வுண்டு தனவந் தர்காள்!

மலைபோன்ற செல்வத்தை மக்களுக்காய்
மனமுவந்து தந்தவரெம் தலைவர் காட்டும்
நிலையான கொள்கைகளுக் குதவச் செல்வம்
நிறைவாக வேண்டுமுள்ளோர் கொடுக்க வேண்டும்
இலைவேறு வழியெவரும் எமக்குத் தாரார்
இயன்றவரை நம்மவரே உதவ வேண்டும்
பல்வேறு தொழில் செய்யும் எமது செல்வர்
பாட்டாளிக் கொருபங்கைத் தரவும் வேண்டும்.

தலைநகரில் இன்னும்பெரு நகரி லெல்லாம்
தத்தமக்கோர் தொழிலதனை தொடங்கி வாழ்வில்
பல பேர்கள் மலையகத்தின் மைந்தர் காசு
பணந்தேடிப் பெருவாழ்வு வாழ்கின் றார்கள்
நலமாகுங் கூடியிவ ரொன்று பட்டு
நாடுவதைக் கொடுத்தாலோ நம்ம வர்க்குப்
பலவழியில் உதவிடலாம் பாட்டாளிப்பேர்
படுந்துன்பம் பரிதிகண்ட பனிபோற் போகும்!

*காங்கிரஸ் 1–3 1991*

## ஓட்டுப் போடுவோம்

ஓட்டுப் போட்டிடும் நாள்வருது
உங்களின் கால்பற்ற ஆள்வருது
நீட்டி நிமிர்ந்துமே நெஞ்சுயர்த்தி
நில்லுங்கள் மலையக மாந்தர்களே!
போட்டியில் வெற்றியே குறிக்கோளாய்
புல்லரும் வருவார்கள் நல்லவர்போல்
தோட்டத்துக் கூலிகள் என்றெம்மைத்
துரத்திய கூட்டமும் உண்டதிலே.

வீட்டுக்கு வீடு வருவார்கள்
வேண்டுமே வாக்குகள் என்பார்கள்
நாட்டுக்கு நல்லது செய்வோர்கள்
நாங்களே என்றவர் புகழ்வார்கள்
சீட்டினில் 'புள்ளடி' வீழ்ந்துவிட்டால்
சொன்னசொல் மறந்தவர் விலகிடுவார்
கேட்பதைக் கூடச் செவிகொள்ளார்
கேலியுஞ் செய்யுவார் மறக்காதீர்.

ஓட்டை 'லயங்களை' மாற்றிடுவோம்
உயர்ந்த வீடுகள் கட்டிடுவோம்
தோட்டத்தின் காணியைப் பங்கிடுவோம்
துயரங்கள் மாறிட வழிசெய்வோம்
வாட்டங்கள் போக்கியே மனிதர்களாய்
வாழ்ந்திடச் செய்யுவோம் என்றவரே
காட்டார் தலைகளை மறுமுறையும்
கைகூப்பி வருகின்ற நாள்வரையும்

இதற்கொர்ரு வழியினைச் சொல்வேன்நான்
எம்மவர் ஒற்றுமைப் படவேண்டும்
எதற்கும் துணிந்த மனம்வேண்டும்
எவருக்கும் அஞ்சாத நிலை வேண்டும்
எதிர்த்தெவர் வந்தாலுந் தளராது
எதிர்கொள்ள நெஞ்சத்தில் உரம்வேண்டும்
முதற்கண் ஒன்றினை மனத்தினிலே
முறையாய் எண்ணியே பார்த்திடணும்

பிரஜா உரிமையை பெற்றிடநாம்
பெருஞ்சமர் செய்தவெம் பெருந்தலைவர்
கரமே உயர்ந்திடக் கைகொடுக்கும்
கடமையும் உண்டெமக் கென்பதனை
ஒருவருங் குறைவிலா தோர்ந்தறிந்தே
உழைத்திட வேண்டுமே அவர்ஜெயித்தால்
பெருமைதான் எமக்குமே எதிர்காலத்தில்
பிறபல நன்மையும் உண்டறிவீர்.

காங்கிரஸ் *1-4-91*

## தலைவரின் கையோங்கச் செய்வோம்

வாக்கிடச் சந்தர்ப்பம் வந்தது சிந்தித்து
வாக்கினைக் கொடுப்பாயடா - உந்தன்
வாக்கொன்று தானெங்கள் விதிதனை மாற்றிடும்
வாய்ப்பினை நினைப்பாயடா - நுனி
நாக்கிலே தேன்வைத்துப் பேசுவார் நீயதை
நம்பிட வேண்டாமடா - அவர்
நோக்கமே எங்களின் ஒற்றுமை குலைப்பது
நெஞ்சினிற் கொள்வாயடா!

0 0 0

உதிரியாய் தோன்றிய சங்கங்கள் தமக்குள்ளே
ஒற்றுமை என்றுகூறி - நமக்
கெதிராக வருகிறார் ஏமாந்தால் மறுகணம்
எதிரிக்கு வாய்ப்பு நேரும் - இன்று
புதிதாக வேறொரு தலைமையும் வேண்டுமோ
பொய்யரை நம்பலாமோ - எங்கள்
விதிமாற்றி வைத்தபெரு வீரரெம் தலைவரின்
வெற்றிக்கு வழி சமைப்போம்!

0 0 0

வாக்குகள் சிதறினால் வல்லமை குன்றிடும்
வளைந்தவர் நிமிர்வாரடா - தந்த
வாக்கினை மறந்தெதிர்த் தாலவர் எமைப்பழி
வாங்கவும் அஞ்சாரடா - எங்கள்
வாக்கினைக் கொண்டுபலன் பெறவழி பலவுண்டு
வழிகாட்டத் தலைவருண்டு - அவர்
வாக்கினைக் கேட்டது போல்நடந் தால்வெற்றி
வந்தெமைச் சேருமேயடா!

பிரதி நிதித்துவம் பறிபோயின் காரணம்
பிறராகார் நாமாகுவோம் - நாங்கள்
பிரிந்தெங்கள் வாக்கினைப் பகிர்ந்தாலோ
தோல்வியே
பதவியும் போகுமேயடா - என்றும்
பிரிவினால் நன்மைகள் தோன்றிடா தலைமையைப்
பின்பற்றி ஒன்று சேர்வோம் - நமைப்
பிரித்திட முயல்பவர் பிடரியிற் கால்படப்
பறந்திட வழிசமைப்போம் !

0 0 0

தலைவருக் கரசுள்ளே தனிப்பட்ட செல்வாக்கு
தடைசெய்ய யாருமில்லை - அவர்
தலையிட்ட காரியம் தவறாது என்கின்ற
தத்துவம் பொய்யுமில்லை - எங்கள்
மலைநாட்டின் துயர்தீர்க்க மாற்றானின் கால்களை
மண்டியிடத் தேவையில்லை - இன்று
நிலையான வாழ்வுக்கு நெறிகாட்டும் தலைவர்கை
நிலைத்தோங்க வாக்களிப்போம்!

காங்கிரஸ் 1-10-90

★ 'மருதம்' எழுதிய ''தலைவரின் கையோங்கச் செய்வோம்'' என்னும் கவிதை படிக்கச் சுவையாகவும் அதன் கருத்து சிந்திக்கப் பயனுடையதாகவும் இருந்தது. கவிஞருக்கு எனது வாழ்த்துக்கள்.

மு.மாசிலாமணி நுவரெலிய.

## வெற்றி கொள்ளுவோம்

தோட்டந் தோட்டமாய்த் தேடி வாக்கினைக்
கேட்டு வாங்கிடக் கூடி நாடுவோம்
நாட்டு நிலைமையை நம்ம வர்க்குநாம்
நன்கெ டுத்துமே விளக்கிக் கூறுவோம்

காரும் வண்டியும் காசும் பணமுமேன்
கையுங் காலும்நன் நிலையில் இருக்கையில்
தேரில் ஓடிப்பின் தெருவில் நிற்பதோ
திறமை யைமுத லாகக் கொள்ளுவோம்

ஊர்கள் தோறுமே உறுப்பி னர்தமை
ஒருங்கி ணைத்தவர் கடமை உணர்த்துவோம்
காரி லாமலுங் காசி லாமலுங்
காரி யந்தனில் வென்று காட்டுவோம்

மாற்றுக் கட்சியோ டொன்றி யொருசிலர்
மலைய கத்தவர் விதியை மாற்றிட
நேற்று முளைத்தகா ளான்கள் போலவே
நாடி வருகிறார் நன்கு உணருவீர்

அற்ப லாபத்தை அடையும் நோக்கினால்
அடிம ரத்தையே அசைக்க நினைக்கிறார்
சொற்ப மேயவர்; தொகை; துரோகிகள்
செயலு ருப்பெறா தென்றே அறியுவீர்

கூட்டுக் கொள்கையைக் கொண்ட காங்கிரஸ்
கோலு யர்ந்திடக் கொடியு யர்த்துவோம்
நாட்டில் இன்றுள நிலையை மாற்றிட
நாமும் பிறருடன் ஒன்றி வாழுவோம்

மனித சக்தியின் மகத்து வந்தனை
மாற்றா ருணர்ந்திடச் செய்து காட்டுவோம்
புனித மானவெம் தலைவர் சொல்லினைப்
புரிந்து வெற்றியும் புகழுங் கொள்ளுவோம்

காங்கிரஸ் 30-4-91

# சேவல் கூவுது

சேவலும் யானையும் சேர்ந்து வருகுது
தேர்தல் களத்தினிலே - மலையகத்
தேர்தல் களத்தினிலே - மிக்க
ஆவலாய் வெற்றி இலக்கினை நோக்குது
ஆளும் பொறுப்பினிலே - கூடி
ஆளும் பொறுப்பினிலே

0 0 0

காலையிற் சேவல் கூவுவது வெற்றிக்
கட்டியம் கூறியன்றோ - நாளை
வெற்றி நமக்கன்றோ - இங்கு
வேலையற் றுச்சிலர் வீடுவீடாய்ச் சென்று
வேண்டுவ தேனாமோ - வாக்கு
வேண்டுவ தேனாமோ?

0 0 0

இ.தொ.கா வென்றால் யாருக்கு லாபம்
எங்களுக் காமன்றோ - மலைகளில்
சங்குமு ழங்குமன்றோ - இதற்குத்
தோதாக வாக்கினைத் தந்திட எம்மவர்
துணிந்திட வேண்டுமன்றோ - வாகை
அணிந்திட வேண்டுமன்றோ?

0 0 0

நாளும் பொழுதும் நம்மவர்க் காகவே
பாடு படுந்தலைவர் - வையம்
பாடும் பெருந்தலைவர் - நமை
ஆளும் பொறுப்பினை ஏற்றிட வைத்திடில்
வாழும் சமுதாயம் - தொழி
லாளர் சமுதாயம்!

காங்கிரஸ் 7-5-91

## வெற்றிக் களிப்பு

வெற்றி வெற்றி வெற்றியென்றே
    வீறு கொள்ளடா - எங்கள்
வீரத்தலைவன் கையுயர்ந்த பெருமை கூறடா;
சத்தியத்தின் வெற்றியென்று
    சாற்றி மகிழடா - நாங்கள்
சமத்துவமாய் வாழ்வோமென உறுதி பூணடா!

வாக்களித்தோம் வாக்களித்த
    வாறுநாம் நடந்தோம் - இன்று
வாகைசூடக் காரணராய் நாமே இருந்தோம்;
வாக்களித்த வாறவரெம்
    குறைகள் தீர்க்கணும் - பெறும்
வகையனைத்தும் பெறவழிகள் தந்து மகிழணும்!
(வெற்றி...)

தோட்டத்தொழி லாளரின்று
    சுதந்திர மக்கள் - தங்கள்
துணிவுமிக்க தலைவர்வழி சென்றிடும் மக்கள்;
நாட்டிலுரிமை யத்தனையும்
    பெற்றநல் மக்கள் - இந்த
நாட்டையாளுவோருக்குறு துணைசெய்யும் மக்கள்;
(வெற்றி...)

இல்லையென்றோர் தந்துவிட்டார்
    எதிர்ப்பையும் விட்டார் - நமக்கு
இரங்காதோர்இறங்கிவிட்டார்இரக்கவும்செய்தார்;
கல்லெனவே இருந்தமனங்
    கனிந்த தேனடா - நமது
கட்டுப்பாடும் ஒற்றுமையும் கண்ட பலனடா!
(வெற்றி...)

நமதுகுறை எடுத்துரைக்க
    நம்மவ ருண்டு - இங்கு
நாதியற்றோ ரென்றநிலை நமக்கிலை யின்று;
சம உரிமை பெற்றவர் நாம்
    சாதிக்க உண்டு - ஆளும்
சபையிரண்டும் எம்மவரின் கைகளி லுண்டு!
(வெற்றி...)

மாவட்ட சபை தேர்தல் வெற்றியின்பின்
காங்கிரஸ் 22-5-91

## தருமத்தின் காவலர்

புலிவேட்டை ஆடிடப் போனவன் நரியூளை
போட்டிடில் நடுங்கு வானோ - வெற்றிக்
கொடிநாட்டி மலைநாட்டின்
பசியோட்டுந் தலைவர்பழிக்
குரல்கேட்டுக் கலங்கு வாரோ?

சலியாது உழைக்கின்ற தலைவருந் தகவிலார்
தலையீட்டுக் கஞ்சு வாரோ - எங்கள்
இடர்பாடு குறைபாடு
தொடராது வழிமாறப்
படும்பாடு தவிர்த்தி டாரே

கல்விக்கு உயிரூட்டக் காளையர் தமைப்பள்ளிக்
கடமைக்குத் தேர்ந்தெ டுக்க - அதை
மடமையென் றோதிடும்
மதியிலார் குரலுக்கு
மதிப்பளித் தொதுங்கி டாரே

யாருக்கும் அஞ்சிடா தெடுத்தநற் கருமங்கள்
யாவுமே வெற்றி கொள்ள - அவர்
ஊருக்கு உழைத்திடும்
உழைப்பினிற் குறை சொல்லும்
உலுத்தரைச் சாடு வோமே

யாரென்ன சொன்னாலும் எதிர்த்தெது
செய்தாலும்
எவருக்கும் அஞ்சி டாது - மக்கள்
காவல ராகவே
சேவைகள் செய்கின்ற
வகையினைத் தொடரு வீரே

தட்டிய கதவுகள் திறந்திடத் திறந்திடத்
தட்டுக வேறு ஒன்றை - நீங்கள்
தட்டினாற் திறக்காத
தாழ் இல்லை தலைவரே
தருமத்தின் காவல் நீரே

காங்கிரஸ் 15-6-1991

## மதுவை வெறுத்திடு மலைமகனே

குடிகெடுக்குங் குடிவெறுப்பாய் தோழா உந்தன்
குடும்பத்தை அழிவிலிருந்து காப்பாய் இன்னும்
பிடிவாதம் ஏனுனக்குச் சொல்நீ கொஞ்சம்
பின்விளைவை எண்ணித்தான் பார்த்த துண்டா?
மிடிதொடரக் காரணமெம் மலைமாந் தர்க்கு
மிகையில்லை மதுப்பழக்கம் என்றால் உண்மை;
கொடிதாகும் இனியுமதைத் தொடர்ந்தா லெங்கள்
குழந்தைகுட்டி பேரர்களுந் தொடருவாரே!

மதுவுக்காய்ச் செலவுசெய்யும் பணத்தைச்
சேர்த்தால்
மாதமொன்றுக் குன்னுழைப்பில் விரய மாகும்
நிதியென்ன என்றறிவாய் நினைத்தால் நெஞ்சம்
நின்றுவிடும் நிச்சயமாய்க் குடிக்க மாட்டாய்;
உதவாத செயலிதனை உயர்மட் டத்தில்
ஓர்ந்தறிந்து திருந்திடவும் வேண்டும் பின்னே
இதமாக எடுத்துரைக்க வேண்டும் நம்போல்
ஏடறியாப் பாமரருந் திருந்த வேண்டும்!

பெருந்தலைவர் சொன்னதென்ன மதுவி லுள்ள
பிரியத்தை விட்டொழிக்க வேண்டும் என்றே
அரியவவர் சொல்லதனை மதிக்க வேண்டும்
அடியோடு குடிப்பதனை வெறுக்க வேண்டும்;
ஒருகல்லில் இருகனிகள் குடியை விட்டால்
ஒன்றுடலுக் கேற்ற தென்பேன் மற்ற தொன்று
பெருகுமுன தாஸ்த்தியொடு அந்தஸ்த் தின்னும்
பெருவாழ்வு வாழவழி பிறக்குந் தானே!

காங்கிரஸ் 1-8-91

## நூறாண்டு வாழ்க ஐயா

தவைர் திரு சௌ. தொண்ட மான்பி றந்த
தினமின்று மலையத்தின் திருவி ழாவாம்;
பலலட்சம் தொழிலாளர் வாழ்வு உய்யப்
பாடுபடும் வேந்தருக்குப் பெருவி ழாவாம்
அலையலையாய் மக்களங்கு கூடி அன்னார்
அடிதொட்டு ஆசிபெறும் தனிவி ழாவாம்
நலமாகப் பல்லாண்டு இன்னும் வாழ
நாமுமவர் தனைவாழ்த்திப் போ ற்று வோமே;

நூறாண்டு வாழ்க ஐயா! வாழ்க! என்றும்
நோய்நொடிக ளற்றுறுதி யோடு வாழ்க
நூறுநூ றாய் ஆண்டுகள்தான் கடந்திட் டாலும்
நினதுபுகழ் மங்காது; நீடு வாழ்க
கூறாத நாவுண்டோ வாழ்க வென்றே
கொற்றவனே உனைநினையா மனமு முண்டோ
வேறாக நீயில்லை ஐயா; எம்முள்
வேரூன்றிப் போனதிரு தொண்ட மானே!

எழுபத்தி யொன்பதென்றார் வயது இன்று
இலையேழோ டொன்பதுதா னென்றேன்
பார்க்கப்
பழுதில்லாப் பதினாறு தானோ என்றார்
பார்த்தாலே தெரிகிறதே இளைஞர் என்றேன்
வழுவில்லா இலட்சியத்தின் பலனா லின்று
வாகைபல கொண்டபெரு வீர ரென்றேன்
இளமைக்குக் காரணமும் அதுவோ என்றார்
ஏனில்லை ஆமாமாம் அதுவும் என்றேன்

தோட்டத்துத் தொழிலாளர் நல்வாழ் வொன்றே
தூயவுயர் இலட்சியமாய்க் கொண்டே இந்த
நாட்டிலவர் எதிர்கொண்ட சோத னைகள்
நானிலமே அறியுமதை அறியா ருண்டோ?
தோட்டத்துக் காட்டான்கள் என்ற பேரைத்
தொழிலாளர் வர்க்கமெனக் கூறச் செய்து
கேட்டதெலாங் கிடைக்கின்ற நிலைக்குத் தூங்கிக்
காட்டியநற் செயல்வீரர் நாமம் வாழ்க!

பலஇனத்தோர் வாழுகின்ற நாட்டில் மக்கள்
பரஸ்பரநல் லுணர்வோடு வாழ்ந்தே மற்றோர்
நலம்பேணிச் சமத்துவமாய் வாழச் செய்யும்
நற்பணியைக் கொள்கையென வரித்தார்;மேலும்
கலை கல்வி கலாச்சார மேம்பாட் டிற்காய்
கல்லூரி கலைக்கூடம் தொழிற் பயிற்சி
நிலையங்கள் பல்புலமைப் பரிசி லுக்கும்
நிதி வழங்கி உதவுகிறார் நாமம் வாழ்க!

ஆதுலரை அரவணைக்கும் பண்பால் ஏழ்மை
அற்றொழிந்து போகமுயல் வீர்க ளென்றார்
தீதுசெய்யும் பிணிதீர்க்க மருந்த கங்கள்
திக்கற்றோர்க் கில்லங்கள் செய்வீ ரென்றார்
போதியநல் லுதவிகளைச் செய்து மக்கள்
புதுவாழ்வுக் கொளியூட்ட வேண்டு மென்றார்
யாதுமவர் அறநிதியி னுதவி யோடே
இயற்றிடுவீர் என்றவவர் நாமம் வாழ்க

காங்கிரஸ் 30-8-91

## மலையகத்தின் காந்தி

பட்டுடுத்துப் பஞ்சணையிற் படுத்து றங்க
பலவசதி இருந்துமய்யா நீங்கள் மட்டும்
கட்டுவதேன் கதர்வேட்டி சட்டை, கர்லில்
கனமான தோற்செருப்பு. இதுநாள் மட்டும்
பட்டதுயர் போதாதோ இன்னு மின்னும்
பாடுபடத் துடிக்கின்றீர் மர்ம மென்ன?
சட்டையில்லாக் கதர்வேட்டிக்காந்தி போல
சாத்வீக வழிகாட்டிச் செல்வ தற்கோ?

சொத்தையெல்லாம் தொழிலாளர் நலனுக் காகச்
செலவுசெய்யும் மனமளித்த தாரோ ஐயா?
உத்தமராங் காந்திமகான் வழிகள் பற்றி
உடமையெல்லாம் கொடுத்திடவோ துணிவு
கொண்டீர்?
எத்தனைபேர் இத்தகைய தியாகந் தன்னை
இதயத்தில் வைத்திருப்ப ராமோ? ஆனால்,
சத்தியமாய் சரித்திரத்தில் உங்கள் நாமம்
சொர்ணலிபி யாலெழுதப் படுமோர் நாளில்!

கடவுளுக்குப் பின்னுங்கள் தனைத்தான் மக்கள்
கையெடுத்துத் துதிக்கின்றார் மலைய கத்தில்
இடர்களைவ திறைவன்செயல் நீங்கள் கூட
இன்னலுற்றோர் துயர்களையத் துடிக்கின் றீர்கள்;
கடமையென்று எண்ணுவதாற் றானே மக்கள்
கரங்கோத்துப் பாடுபட்டு உழைக்கின் றீர்கள்;
தடையின்றி மலையகத்தான் தலையு யர்த்த
தோள்கொடுக்கும் மலையகத்தின் காந்தி ஜீயே!

காங்கிரஸ் 15-10-1991

## மலையகத்தின் புதிய காற்று

மலைநாட்டில் வீசுங் காற்று
முன்போலின் றில்லை யய்யா;
கலைகல்வி கலாச்சா ரத்தில்
கலந்தன்றோ வீசு தின்று;
பலகாலம் அடிமை வாழ்வு
பறந்துமே மக்கள் தம்மின்
நிலைமாறி அறிவுத் தாகம்
நிறைந்திட வீசு தன்றோ?

தோட்டத்தில் கொழுந்து கொய்யும்
தொழிலொன்றே அறிந்த பெண்கள்
நாட்டமின் றறிவு தேடும்
நல்வழி தொடரக் காண்போம்;
பாட்டாளி வர்க்கத் துள்ளும்
பற்பல படித்தோர் தோன்ற
ஏற்றநற் றருணங் கண்முன்
இலங்குதே காணா ருண்டோ?

எல்லோர்க்கும் போலுங் கல்வி
எம்மவர் தமக்குங் கிட்டும்;
நல்லதோர் வாய்ப்பை விட்டால்
நாளைஏ மாற்றந் தானே!
இல்லையென் றிருந்த போழ்து
எம்மிடை கற்றோர் சற்றாம்;
வல்லவர் - அறிஞர் தோன்ற
வகையின்று பெற்றிட் டோமே.

பல்வகைத் தொழிலி லும்நம்
பங்கினைச் செய்தல் வேண்டும்;
கல்வியைக் கருத்தோ டுன்னிக்
கற்றிட வேண்டும் ஒவ்வோர்;
இல்லத்தி லும்ப டித்தோர்
இன்றுளர் என்னுங் காலம்
சில்லெனப் புலரக் காற்றே
சிறப்போடு வீசு வாயே!

காங்கிரஸ் 15-12-91

## சமாதானத் தூதுசெல்வோம்

நாமுமிந்த நாட்டினுயர் பிரசைகள் தாமே
நமதுகடன் அறிந்து செயல் பட்டிடு வோமே;
தாமுந்தமது வாழ்வுமென ஒதுங்கி வாழுதல்
தவறுசமா தானம்வரத் தூது செல்வோம்!

அமைதியிந்த நாட்டிலிலா தொளிந்து வாழ்கையில்
அகிம்சைவழி சென்றதனைத் தேடிட வேண்டும்
சுமைபெரிதே சமாதானத் தூது செல்வது
தூயசெய்கை என்பதனால் துயர்நெ ருங்கிடா;

உயர்ந்தமலை தனில்வாழ்வோர் உயர்ந்த
கொள்கையால்
ஒன்றிணைந்த தேசமொன்றைத் தோன்றச்
செய்குவோம்;
முயற்சியின்றி வேண்டாத குறைகள் காணுவோர்
முகம்வெளுக்க நல்லபணி செய்து
வெல்லுவோம்!

சிங்களவர் தமிழ்முஸ்லீம் பறங்கி யர்களும்
சேர்ந்துமலை நாட்டில்வாழும் நம்ம வர்களும்
எங்கிருந்த போதிலுமிந் நாட்டின் மக்களே
எல்லோர்க்கும் உரிமைசம மென்று பாடுவோம்;

அண்ணன்தம்பி இருவருக்குள் பகைமை
தோன்றினால்
அடுத்தவுடன் பிறப்பதனைத் தீர்த்து
வைக்கணும்;
மண்ணிலிது சகஜமென்ப தாலெம் தலைவரும்
மத்தியஸ்த்தம் செயவிழைந்தார் மறுக்க
லாகுமோ?

நல்லஉள்ளங் கொண்டமாந்தர் நடுவ ராகநம்
நாலுமறிந்த தலைவரிருப்ப தேற்ற
மென்கிறார்;
பொல்லாதது நடந்திடிலும் நமது தலைவரின்
பெருமையுயரப் பொறுக்காதோர் மறுக்கின்
றார்களே!

காங்கிரஸ் 15-2-92

## வேலைக்கேற்ற கூலி

வரலாற்றில் மறக்கவொணா மாற்றமொன்று
வந்ததையா நூறாண்டு கழிந்த பின்னே
பெருந்தோட்டத் தொழிலாளர் வாழ்வி லின்று
பொற்காலம் இதோகா பெற்ற வெற்றி
வருடமொன்றில் 'முந்நூறு நாட்கள் வேலை'
வழங்கிடவே வேண்டுமன்றி ஊதி பத்தை,
சரியாகக் கணக்கிட்டுத் தருதல் வேண்டும்;
சட்டமிது மக்களுக்கு விடிவு காலம்!

''தோட்டத்தில் வேலையில்லை'' யென்றாற் கூலி
தராதிருந்த காலமின்று மாறிப் போச்சே;
தேட்டத்துக் குகந்தபடி வருவாய் கிட்டும்
தக்கநிலை வந்ததினிப் பயமே யில்லை;
கூட்டுமொத்த மாகத்தொழி லாள ருக்குக்
கிடைத்தவரப் பிரசாதம்நாம் நன்றி-
சொல்வோம்
வீட்டுக்கு வீடுமகிழ்ந் திடுநற் செய்தி
வேலையில்லை யெனுமச்சம் போக்கிற் றன்றோ?

வேறு

உடலுழைப்பை நம்பிவாழு மெம்ம வர்களின்
ஊதிபத்தில் தானேயுயிர் தங்கி நிற்குது;
தொடர்ந்துசில நாட்கள்வேலை தரம றுத்திடில்,
தோன்றிநின்ற துன்பநிலை மாய்ந்து போனதே;
கிடைத்ததனை யுண்டுவாழ்ந்த காலம் மாறியே
கேட்டதனைத் தரவிழைந்தார் உருணர்ந்தே
வாழுவோம்;
கடமைமிகு பெருந்தலைவர் பெற்ற வாய்ப்பினைக்
காலமெலாம் எண்ணிநன்மை பெற்று
உயருவோம்!

மாதமிரு பத்தைந்து நாட்கள் வேலையில்
மனமிருத்திப் பாடுபட்டால் வாழ்வு சிறந்திடும்
ஊதிபத்தில் ஒருதொகையை ஒன்றுசேர்த்திடில்
உழைக்கவிய லாதநாளில் உதவி யாகுமே;
சூதுகுடிப் பழக்கங்களைத் துறந்து வாழ்பவர்
சுகம்பெறுவர், செய்தொழிலால் உயர்ச்சியுங் கொள்வார்;
யாதுமெங்கள் நன்மைக்கென வாழுந் தலைவரின்
இதயம்மகிழ நமதுவாழ்வைத் தொடர்ந்திடு வோமே!

காங்கிரஸ் 1-5-92

## மலையழகு

அலைதரை தள்ளிய நுரையெனப் பனிதரை
அளாவியே எங்கணுந் தோன்றும்
மலைவளர் தேயிலைத் தளிர்பரந் தழகிய
மலரென விரிந்துளம் ஈர்க்கும்
சலசல வெனச்சிறு ஓடையிற் புதுப்புனல்
சப்தித்து இன்னிசை பாடும்
நிலமிசை இயற்கை நின்றர சோச்சும்
நிகரிலா மலையழ கழகே

## தமிழொலிக்குந் தலமனைத்தும் தலைவா நீயே

சிங்களத்தில் தமிழர்களின் தலைவன் நீயே
செந்தமிழர் உரிமைக்குக் குரலும் நீயே
வங்கக்கடல் தாண்டியுந்தன் புகழ்ப ரந்து
விரவியுல கெங்கணுமே போகு தையா
சிங்கையிலே வாழுமுஸ்லீம் தமிழர் கூடி
சாதிமதம் பாராது விழாவெ டுக்க
மங்காவுன் புகழன்றோ கார ணம்நீ
மலையகத்தோர் வழிகாட்டுந் தீப மன்றோ

அங்கமெலாம் புல்லரித்துப் போன தந்த
அழைப்புவந்த செய்தியினைக் கேட்டு நாளும்
சங்கொலிக்குள் அடங்குமெங்கள் வாழ்வும் உய்யச்
சங்கல்பங் கொண்டவனே பெருமை கொண்டோம்
பங்கமறுத் தெமையுயர்வாய் வாழச் செய்தாய்
பாரெல்லாம் உன்புகழைப் பாடு தன்றோ
எங்கெங்கு சென்றாலும் ஏந்த லேயுன்
இணையில்லாத் திருநாமம் நிலைத்தே நிற்கும்

தலைவாசல் திறந்ததின்று தமிழர் வாழுந்
தலமெல்லாம் அழைப்பருனைத் தலைவா நீயும்
மலைபோல புகழ்சேர்க்க மார்க்கஞ் சுற்றி
மிகுமதனால் மலையகத்தோன் பெருமை—
கொள்வான்
நிலைமாறாக் கொள்கைகொண்ட தன்மை யாலே
நினக்கென்றும் வெற்றியன்றித் தோல்விஇல்லை
அலைமோதுங் கடல்தாண்டி யன்றி மேலே
ஆகாயங் கடந்துமுந்தன் பெயர்நி லைக்கும்

காங்கிரஸ் 1-7-92

## உறுதிமிக்க தலைவர்

மலையகத்தின் மாசிலாத தலைவனே யுன்னை
மனந்திறந்து வேண்டுகிறோம் மலையின் மக்களே
இலையொருவர் எனிலுண்மை உந்தனைப் போல
எதிலும்வெற்றி கண்டுயர்தோர் இந்த நாட்டிலே
தொலைந்ததையா சமாதானம் இந்த மண்ணிலே
தீமையழிந் தொன்றுபடத் தூது செல்லுவாய்
நிலையான அமைதியெங்கள் சொர்க்க பூமியில்
நிலைபெறநின் உதவிவேண்டும் நேர்மையாளனே!

மனவுறுதி குன்றாவுன் முயற்சிக ளாலே
மலையகத்தோர் தலைநிமிர்ந்தேவாழச் செய்கிறாய்
இனபேதம் ஒழிந்துமக்கள் ஒன்றியே வாழ
இந்நாட்டில் சமாதானம் ஓங்கச் செய்யுவாய்
உனையெவரின் எதிர்ப்புகளும் ஒய்ந்திடச் செய்யா
உலகறிந்த உண்மையிது உயர்ந்த தலைவனே
தினம்வீசுங் காற்றிலாடுந் தேயிலைச் செடிதான்
தாங்குகின்ற மலைகளென்றும் அசைவதில்லையே!

எத்தனைதான் போராட்டம் உந்தன் வாழ்விலே
எதற்கும்அஞ்சி டாதவனே எங்கள் தலைவனே
சத்தியமே வெல்லுமெனப் போரு 'ாடுவாய்
சாதனைகள் எண்ணறநீ சாதித் துயர்ந்தாய்
நித்தியமாய் சமாதானம் எங்கள் நாட்டிலே
நிலைத்திருக்க நினதுபணி வேண்டுமே ஐயா
புத்தியுள்ள மனிதருனைப் புகழ்ந்தே யுதவுவார்
போரழிந்தே புரிந்துணர்வு தோண்றிடச் செய்வாய்

காங்கிரஸ் 1-6-92

## ஆயிரம் பிறைகண்ட தலைவன்

ஆயிரம் பிறைகண்டாய் தலைவா இந்த
அகிலமெலாம் போற்றுதுன்னை வாழ்வில்
கொண்ட
தூயவுயர் கொள்கையினால் மலைய கத்தோர்
தலையுயர்த்தி வாழ்ந்திட நல் வழிகள் செய்தாய்;
மாயமென்ன செய்தனையோ உலகி னோர்கள்
மனங்களிலே குடிகொள்ள இந்த ஆண்டின்
தூயதமிழ்த் தாயீன்ற மக்க ளுள்ளே
தலைமகனாய்த் தமிழகத்தோர் தேர்ந்திட்
டாரே!

0 0 0

சிங்கையிலே உன்புகழைப் பாடு கின்றார்;
சிங்களத்தின் மகிமையுன்னாற் பெருகு தையா
எங்கெங்கு சென்றாயோ அங்கங் கெல்லாம்
ஏந்தலேயுன் புகழ்பாடா நாவும் உண்டோ?
வங்கப்பெரு சாகரத்தின் விழியாய் என்றும்
விளங்கு ''ஸ்ரீ லங்கா''வின் அமைச்ச னேயுன்
மங்காத புகழாலே மலைய கத்தோர்
மார்தட்டி நிற்கின்றார் காண்கி லாயோ?

0 0 0

எண்பதுதான் வயதுனக்கு அதிக மில்லை;
எண்ணரிய உன்செயலால் இறைவன் இன்னும்
மண்வாழும் பாக்கியத்தைத் தந்த ருள்வான்;
மா தவங்கள் வேறொன்றும் வேண்டா மன்றோ?
கண்முன்னே பலன்கொள்வோர் சிலரே நீயோ
கைதொட்ட அனைத்திலுமே வெற்றி கண்டாய்;
மண்ணுலகில் மக்களுளம் கண்ட மேலாம்
மாந்தருள்ளே முதல்அணியில் இருக்கின் றாயே!

பூவள்ளிச் சொரிந்துன்னை வாழ்த்து வாழ்வார்கள்;
பூஞ்சரத்தால் மறைத்துன்னைப் போற்று
வார்கள்;
நாவினிக்கப் புகழ்பாடித் துதிசெய் வார்கள்;
நாயகனே யுன்பாதம் வீழு வார்கள்
யாவுமவர் செய்வதெலாம் நன்றிக் காக
இதயத்தில் நீகொண்ட உரிமைக் காக
பாவள்ளிக் கோத்தேயோர் மாலை யாக்கிப்
பாடுகின்றேன் தலைவாநீ யேற்றி டாயோ?

0 0 0

இன்னும்பல் லாண்டுலகில் வாழ்வா யையா!
ஏற்றபணி முடித்தாலும் வாழ வேண்டும்;
பொன்மனத்தின் செம்மலேயெம் தொண்ட மானே
பெயர்போல தொண்டுசெய்யும் பெரியோய்;
நாட்டின்
தன்மானம் மிக்கவுயர் தலைவா உன்போல்
தலைவரின்னும் பிறப்பாரோ பேத மற்றே
மன்னுலகில் அனைவருமே ஒன்றி வாழும்
மாசில்லாக் கொள்கைகொண்டோர்
தலைவா வாழி!

காங்கிரஸ் 30 8-92

## போனால் போகட்டும் போடா

உதிருகின்ற இலைகளினால் மரத்துக் கென்ன
ஊறுவந்து உற்றிடுமோ; அரிசி யற்ற
பதர்காற்றில் பறந்திட்டால் நெற்கு வைக்குப்
பாடொன்றும் தோன்றாதே; கட்சி விட்டுச்
சதிகார மனத்தோடு செல்லு வோர்கள்
சாக்கடையில் புரள்வதொன்றே மிஞ்சும்; இன்று
புதிதாகத் தோன்றுமொன்றை நம்பிக் காலைப்
புதைத்தவர்கள் புதைகுழியில் புதைந்தார்
ஆவார்!

0 0 0

ஆலமரம் போன்றதன்றோ இ. தொ. கா. வும்
ஆறுதற்கு நிழல்பரப்பும் விருட்ச மன்றோ!
சீலமிக்க தலைவனதன் ஆணி வேராய்த்
திகழ்கின்றா ரெனிலதனை அசைக்கப் போமோ?
வேலிதனைத் தாண்டுகின்ற வெள்ளாட்
டைப்போல்
வேறுவழி போனவர்கள் தொலைந்தே போவார்
காலமிதைத் தப்பாமல் காட்டும்; மாற்றார்
கைகழுவ வெட்கியவர் கவல்வார் நாளும்!

0 0 0

வளர்கின்ற கொடி, சார்ந்த மரத்தை விட்டு
வழுக்கிவிழுந் தாலுமது வாடிப் போகும்
வளர்த்துவிட்ட மரம்அழிய மாட்டா திஃதோர்
வரலாறு கூறுமுண்மை; மறுப்பா ருண்டோ?
கிளையொடிந்து போனாலும் வேர்ப்ப லத்தால்
கிளர்த்தெழுந்து அந்தமரம் தருவாய் ஓங்கும்;
முளையைநம்பும் மூடர்களொன் றறிய வேண்டும்
முளையிடையில் கருகிடவும் கூடும் என்றே!

உதிர்ந்துவிட்ட ஒன்றிரண்டு உரோமத் தாலே
உடலென்ன வாடிச்சோர்ந் திடுமோ? அஃதால்
புதிதாக என்னபயன் தோன்றும்? வேண்டின்
பொய்க்கொண்டை தான்னசெய்ய லாகும்?
சென்ற
சதிகாரக் கும்பலினால் இ. தொ. கா. வின்
சக்தியொன்றும் குன்றாதே; சென்றோ ராலும்
எதிராளிக் கென்னபயன்? ஒன்று மில்லை!
இடம்பெயர்ந்து வீழ்ந்தசிலை போல்வா
ரன்னார்!

காங்கிரஸ் *01-01-1993*

★ "போனால் போகட்டும் போடா" என்னும் 'மருதம்' எழுதிய கவிதை மனசைக் கவர்ந்தது. விலகிப் போனவர்களுக்கு கவிஞர் காட்டியுள்ள உதாரணங்கள் நயக்கத்தக்கன.

இரா.பாக்கியநாதன் ஹட்டன்.

## உலகாளுவோம்

நாளைமட்டும் இல்லைஇந்த நாளும் நமதே
நம்பிக்கையும் துணிவும்எங்கள் ஆயு தங்களே
வேளைவரும் என்றிருந்தால் காலம் வீணடா
வெற்றியென்னும் இலக்கைநோக்கி வேக -
மாய்நட
காளையர்கள் செல்லும்பாதை கடின மாயினும்
கருத்திற்தூய்மை கொண்டுழைத்தாற்-
கஷ்டம் விலகுமே
ஆளையாளை நம்பிவாழ்ந்த காலம் மாறணும்
அனைவருமே உழைத்துஇந்த உலகை -
ஆளுவோம்

## கள்ளு குடிப்போம் வா!

பொறந்ததடா புது வருஷம்
பேச்சு முத்து வா - நாங்க
புள்ளகுட்டி யோட சேந்து
கள்ளுக் குடிப்போம்

மறந்திடணுங் கள்ளயினி
நாச்சி முத்தண்ணே - நாங்க
மனுஷங்களா மாறிடணும்
மனசுந் திருந்தணும்

அப்பன் பாட்டன் பூட்டனெல்லாஞ்
செஞ்சத தானே - நாங்க
அண்ணிலிருந்து இண்ணுவரை
செஞ்சிட்டு வாறம்

எப்பவுமே அதுதொடந்தா
நாச்சி முத்தண்ணே -- நாங்க
இருந்தயெடந் தெரியாமே
போவமே யண்ணே

தப்புண்ணு சொல்லுறியா
தம்பிநீ நாங்க -- இனிமே
தொடாதிருக்க வழியொணையுஞ்
சொல்லுநீ யப்பா

இப்பருந்தே குடிப்பதநான்
உட்டுட்டே னெண்ணு -- எங்க
இ. தொ. கா. தலைவர் மேலே
சத்தியம் பண்ணு

சத்தியமா குடிக்கமாட்டேன்
சாகும் வரைக்கும் நான் -- நம்ம
தலைவர் மேலே ஆணையென்ன
நம்புடா தம்பி

புத்தியுள்ள மனுஷன் நீதான்
நாச்சி முத்தண்ண -- ஒன்னப்
போலமத்தப் பேருமிருந்தா
புண்ணிய மண்ணே

நானும்நீயுஞ் சேந்துக்கிட்டு
லயம்லய மாக -- மலையின்
நாட்டு மக்கள் திருந்தவென
எடுத்துச் சொல்லுவோம்

மானமுள்ள மனுஷனுங்க
மலையகத் தாங்க -- சொன்னா
மறுக்காமல் குடிப்பதையே
மறந்திடு வாங்க

நல்லதடா தம்பியிண்ணு
நல்ல நாளடா -- போயி
நம்மவங்க காலையேனுங்
புடிச்சி கெஞ்சுவோம்

இல்லாமை இல்லாமப்
போகுமே யண்ணே -- குடி
இல்லாமப் போயிட்டுண்ணா
எங்களுக்குள்ளே!

காங்கிரஸ் *01-02-1993*

## தலைர் கரம் ஓங்கச் செய்வேம்

பிறப்புரிமை கொண்டுமலை நாட்டில் வாழ்வோர்
பொறுப்புடனே செயல்படுநாள் ஆட்சி மன்ற
உறுப்பினரைத் தேர்வு செய்ய நடக்குந் தேர்தல்
ஒன்றியநாள் எதிர்நோக்கி நிற்கும் நாளே
மறப்பதென்றுங் கூடாநம் வாழ்வில் நல்ல
மாற்றங்கள் வந்தசொர்ண காலந்தன்னை
திறக்குங்கோல் எம்தலைவர் கையில் என்னும்
தத்துவத்தை மனங்கொண்டே துணிவோம்
வெல்வோம்

எப்போதெஃ தெம்தேவை என்று ணர்ந்தே
இசைந்தவழி தனில் முயன்று பெற்ற ளிக்கும்
ஒப்பில்லாப் பெருந்தலைவர் வழியைப் பற்றி
ஒழுகுவதே கடனாகும் வாழ்வில் என்றுந்
தப்பில்லா தோர்ந்தறிந்தே செய்வார் அஃதில்
சிறிதேனும் ஐயமெமக் கில்லை இன்றுஞ்
செப்புமவர் வார்த்தைகளைத் தேவ வாக்காய்த்
துணைகொள்வோம் தலைவர் கரம் ஓங்கச்
செய்வோம்

நமக்காக வாழுகின்றார் நமக்கென் றேதான்
நாளெல்லாஞ் சிந்தித்துச் செயல்செய் கின்றார்;
தமக்காக வாழாத தலைவர் இன்று
சார்ந்தவழி சேர்ந்தொன்றிச் செல்வோம்
முன்போல்
எமக்காகப் பெற்றளித்த தனைத்தும் போன்றே
இன்னுமின்னும் பெற்றளிப்பார் நெஞ்சிற்
கொள்வோம்
சுமக்குமவர் சுமைகுறைய வேண்டுமாயின்
தோள்கொடுப்போம் துணிந்தவர்கை ஓங்கச்
செய்வோம்

வாக்களித்தால் மாறுசெய்ய மாட்டார் என்றும்
வாக்கேற்றால் வாங்காது விடவும் மாட்டார்
வாக்களிக்கும் உரிமையும்நம் அனைபே ருக்கும்
வழங்கவைத்த பெருந்தலைவர் நினைவிற்
கொள்வோம்
வாக்களிக்குங் காலமிது பொன்போ லெங்கள்
வாக்கினுக்கும் விலையுண்டு; தலைவர்
சொற்போல்
வாக்களிப்போம் வரலாற்றில் எங்கள் நாமம்
வைரவரி யாகிடச் செய் திடுவோம் வெல்வோம்

காங்கிரஸ் 15 - 05 - 1993
மாவட்ட சபை தேர்தல் வெற்றியின்பின்

## அச்சம்தவிர்

உச்சிவெயில் உடலுருக்க உதிரம்வியர்வை யாகிட
உழைக்கும்எங்கள் உழைப்பிற்சிலர்-
உயர்ந்துவாழ அன்னவர்
எச்சிலுக்காய் ஏங்கிநாங்கள் ஏன்இரக்க-
வேண்டுமோ
இரங்குவோருக் கிணங்கிமற்ற ஈனர்களைச்
-சாடுவோம்
குச்சிலிழி வாழ்வுதலை குனிந்தநிலை மாறியே
கொள்கையுள்ள மனிதராக் கொடுமைகளை
எதிர்த்துநாம்
அச்சமற்றுத் தலைநிமிர்ந்து அநீதிகளை வென்றுஇவ்
அவனிதனில் முதன்மையெமக் கென்றுணரச்
-செய்குவோம்

## காற்றுள்ள போதே....

காற்றுவீசும் போதுதானே தூற்றிக்கொள்ளணும்
கற்றமலை யகத்திளைஞர் தெரிந்து கொள்ளனும்
நேற்றிருந்த நிலையைசற்று நினைந்து பார்க்கணும்
நாடுபோற்ற நாமுயர வழியைக் காணணும்
ஆற்றுவெள்ளம் அனைவருக்கும் பொதுவென்
றெண்ணணும்
அடைந்த சிறுபேற்றைக்காத்து அதிலும் உயரணும்
மாற்றுவழி அறிந்து நமது மிடிமை மாற்றணும்
மலையகத்தோன் நெஞ்சிலின்று உறுதி
பொங்கணும்

* *

ஆயிரந்தான் இன்றுகையில் ஊதிபம் உனக்கு
அதுவுமிலா திருந்தகால இருந்தது நமக்கு
காயமொன்றே மூலதனம் முன்னர் எமக்கு
கல்வியென்ற ஆயுதமின் றெம்மிட மிருக்கு
தூயமனத் தோடுழைத்துத் தொடரு வோரையும்
துறைகள்பல வென்றுயரத் தூண்டுதல் வேண்டும்
ஆயகலை அத்தனையும் அறிந்திட வழிகள்
அமைத்துதவுந் தலைவர்வழி தொடர்ந்திட
வேண்டும்

* *

மேழிபிடித்த உழவன்அறிவில் மேதை யாகினான்
மரத்திலேறி மதுகொணர்ந்தோன் மிகைத்ததை -
வென்றான்
ஆழியூர்ந்து மீன்கவர்ந்தோன் அறிஞ னாகினான்
அடுக்களைப்பாண் டம்சமைத்தோன் ஆளக்
குதித்தான்
வாழும்வழி மாற்றியவர் வரிசையில் முதலாய்
வந்ததெலாங் கல்வியினால் வேறிலைக் காண்பாய்
நாளை நீயும் அவ்வழியே மலையகத் தோனே
நன்குகற்று உயர்வடைய முயன்றிட வேண்டும்

நிரந்தரமில் லாததொழில் கையி லிருப்பதாய்
நினைந்திடாதே நிலைமைமாறி நிரந்தர மாகும்
பொருந்துமொரு பொழுதுவர புரிந்தது வேளை
பெருந்தலைவர் தன்திறனாற் பிறரை வெல்லுவார்
இரந்தெதுவும் பெறுநிலைஈங் கெமக்கிலை -
இனிமேல்
இ. தொ. கா வின் முயற்சியினால் எல்லாம் -
கிடைக்குமே
சரித்திரத்தை மாற்றும் எங்கள் தலைவரை யுலகம்
சேர்ந்துபோற்றும் காலம்வரும் சத்தியம் ஈதே!

காங்கிரஸ் 15-7-93

★ கவிஞர் மருதத்தின் 'காற்றுள்ள போதே' என்னும் கவிதை படித்தேன். நீண்டகாலத்தின் பின் அவாது கவிதை பிரசுரமாகியுள்ளதே! நல்ல தரமான கவிஞர்!

கலையன்பன் சிவா ஹட்டன்

## நன்றே வாழ

பற்பலவுங் கற்றறிதல் வேண்டும் ஒன்றில்
பண்டிதனாய்த் தேறிடவும் வேண்டும் நன்றே
மற்றவர்க்கும் போதிக்க வேண்டும் நல்ல
மனத்தோடு தாமதனைச் செய்ய வேண்டும்
கற்றவற்றில் நல்லவற்றைப் பேண வேண்டும்
கருத்தற்ற வற்றைமனம் மறக்க வேண்டும்
சொற்பேன்று தான்செயலும் இருக்க வேண்டும்
சுயமன சிந்தனையும் தெளிவும் வேண்டும்

## பல்லாண்டு வாழ்க மாதோ!

யாரெவரென் றறியாத எத்தனைபேர்
இம்மண்ணைச்
சீர்பெறவென் றுழைத்தனரோ? சென்னீரைச்
சிந்தினரோ?
ஊரறியாப் பேரறியா துழைத்தோர்கள்
மடிந்தாலும்
உரியபலன் உழைப்பினுக்கு உண்டென்று
காட்டினரே;

★ ★

வேரோடிச் செடிவளர வியர்வைதனை
இறைத்தவர்கள்,
வீரியத்தை உரமாக விட்டழிந்து
போனவர்கள்
தீராத பசிப்பிணியின் தீவிரத்தால்
மாய்ந்தவர்கள்
ஏராளம் ஏராளம் எண்ணிக்கை யாரறிவார்?

★ ★

பாரறிய அவர்பட்ட பாடுகளைத் தேயிலையின்
பூர்வீகந் தனைச்சிறிது புரட்டுங்கால்
அதுசொல்லும்
நாராக உடல்தேய்ந்து நடைப்பிணங்கள் போலாகி
நரைத்தபின்னும் உழைத்துழைத்து
நாதியற்றுஞ் செத்தனரே;

★ ★

ஒருவேளைக் கஞ்சியெனும் உணவாகக்
கிடைக்காதோர்
உறையவிடந் தானுமற்று உளம்நொந்து
திரிந்தவர்கள்
எரிகின்ற செந்தணலில் இட்டபுழுப்
போல்வாழ்ந்தோர்
ஏராளம் ஏராளம் எண்ணிக்கை யாரறிவார்?

பச்சைப்ப சேலென்று பார்க்குமிடம்
அத்தனையும்
பசுந்தளிரால் அழகுபெறும் பாக்கியத்தைத்
தந்தனரே,
உச்சிமலை மேலிருந்தே ஒருசாணும் இடையற்றுக்
கச்சிதமாய்ச் செடிவளர்த்துக் காத்தவர்கள்
அன்னவரே,

★ ★

தேசத்தின் வருமானம் திக்கெல்லாம் இருந்துதரும்
தேசியநல் விளைபொருளாய்த் தேயிலையைப்
போற்றுபவர்
பேசாரே யோர்வார்த்தை புகழ்ந்துரையார்
நெஞ்சமற்றோர்
பாசத்தோ டவைவளரப் பாடுபட்ட
மானிடரை!

★ ★

இத்தனைக்கும் ''பலன்கொள்வோர்'' எண்ணாது
போனாலும்
ஏறவைக்கும் ஏணியையே இகழ்ந்தாலும்
வெறுத்தாலும்
சத்தியத்தைப் புதைகுழியிற் றாழப்ப தித்தாலும்
தருமநெறி பிறழ்ந்தநீதி தனைச்செய்த
போழ்தினிலும்

★ ★

உத்தமநற் றலைவரினால் உலகறிய இன்றவரின்
உறுதிமிக்க கொள்கைகளும் ஒவ்வொன்றாய்
வெற்றிபெற
நித்தியனே அருள்கின்றான் நிலமகளும்
போற்றுகின்றாள்
நீதிக்கும் நேர்மைக்கும் நாயகராய்
நிலைபெறுவார்

பாடுபட்டோர் நிலையுயரப் பாடுபடும்
''பெருந்தலைவர்''
பிறந்ததிரு நாளின்றோ பத்தெட்டோ
டொன்றாக
நாடுபவை அத்தனையும் நலமேகை கூடவவர்
நம்மவர்க்கு நாயகராய் நிற்பதெங்கள்
பாக்கியமே

0 0

கோடான கோடிதமிழ்க் குடிமக்கள்
முதல்மகனாய்க்
கௌரவமுங் கொண்ட ''தொண்டமானே''யெம்
''மலைமன்னா''
ஈடில்லாப் பெருமகனே! இன்றேபோற் பல்லாண்டு
இறையருளால் வாழ்கவென
இறைஞ்சுகின்றோம் வாழியவே!

(தலைவர் தொண்டமான் அவர்களின் 81ம்ஆண்டு-பூர்த்தி விழாவின்போது)

★ சென்ற 'காங்கிரஸ்' மலரில் ஒரேயொரு கவிதைதான் பிரசுரமாகியிருந்தது. ஒன்றேயானாலும் தரமாக உருப்படியாக அமைந்திருந்தது. அதனை எழுதிய கவிஞர் மருதத்திற்கு பாராட்டுகள் உரித்தாகட்டும்.

க. ராஜாமணி - பதுளை.

## நிமிர்ந்து நில்

வேலைக்கேற்ற கூலிதர
வேண்டுமென்றே கேளடா
தோல்மரக்கப் பனியில் வாடும்
துணிவுமிக்க தோழனே
காலைதொட்டு மாலைவரை
கஷ்டமுறும் வாழ்வினில்
நாலுபத்துத் தேடிநீயும்
நலம்பெறவென் றுறுதிகொள்!

0 0 0

உள்ளவரைக் கேட்பதிலே
ஒன்றும்பாவம் இல்லையே
கொள்ளைலாபந் தேடுபவர்
கொடுப்பதனாற் குறையுமோ
பிள்ளைகுட்டி வாழ்வதுந்தன்
பிழைப்பை நம்பித் தானடா
எள்ளளவும் இரங்குமனம்
இலாததிந்த உலகமே!

0 0 0

கொடுவெயிலின் நெருப்பலையில்
குருதிகருகி வழிந்திட
படைபடையாய் அழுக்கு உடலில்
படிந்துகாய்ந்து கரைந்திட
இடைவிடாது நாடுஉய்ய
இயந்திரமாய் உழைக்கும்உன்
மிடியகலக் கரங்கொடுப்போர்
மேதினியில் யாருளார்?

0 0 0

உடல்வலுவே மூலதனம்
உண்ணும் உணவின் தேறலே
கிடைக்கும்பலன் வேறெதனைக்
கண்டனைநின் வாழ்வினிலே
அடுத்தவனைக் கெடுத்துவாழ்வோர்
அதிகம்இந்த மண்ணிலே
கொடுத்ததனை எடுத்துக்கொண்டே
குனிந்திடாதே நிமிர்ந்துநில்!

காங்கிரஸ் 01-10-93

★ மருதத்தின் அழகான கவிதைகளை இப்போது காணோமே! சென்ற இதழ் கவிதையும் (நிமிர்ந்து நில்) மிகநன்று.
அ.பிச்சைப்பிள்ளை பசறை

## மலையகத்தின் சிறுவர்களே!

பள்ளிசெல்லா திருக்குந்தோட்டப்
பிள்ளைகள் வாரீர்
படிப்பின்அருமை எடுத்துரைப்பேன்
பாடலில் கேளீர்
துள்ளியோடும் பருவம்இது கல்வியைத் தேடத்
தோதான காலமெனத் தெரிந்து கொள்ளுவீர்
எள்ளளவும் பொழுதைவீணே கழித்திட
வேண்டாம்
இயன்றவரை அறிவு நுகர்ந்தே ஏற்றங்கள்
காண்பீர்
கொள்ளை போகாச் செல்வங்கல்வி யொன்றே
வேறில்லை
கொடுத்திடிலுங் குறையாதே கூடுமே காண்பீர்

0 0 0

பாலைநிலம் போலுளத்தைப் பாழ்படுத் தாதீர்
படிப்பதற்குக் காலநேரம் பார்த்திருக் காதீர்
நாலுமறிந்த மனிதனாக வாழ்ந்திட வேண்டும்
நமையுலகம் மதிக்க அறிவைப் பெருக்கிட
வேண்டும்
காலையிலே எழுந்துகற்ற கல்வியை மீட்பாய்
கடமைகல்வி கற்பதெனக் கருத்தினில் ஏற்பாய்
வேலைதேடித் தெருத்தெருவாய் அலைந்திட
வேண்டாம்
விதியை மாற்றி அறிவுலகின் ஒளியாய் மாறுவாய்

0 0 0

''இளமையிலே கற்குங்கல்வி சிலையில்எழுத்தாம்''
என்றஉண்மை தனைமனத்தில்
ஊன்றிட வேண்டும்
அளவிலாத திருவிருந்தும் அறிவி லாதவர்
அவைமுதன்மை பெறுவதரி தாகுமே காண்பீர்
பிழையிலாது வாழ்ந்துஉயர் பேற்றினை அடையப்
பிள்ளைகளே கல்விதனைத் தேடி நுகருவீர்
விளைவதுநாம் விதைப்பதுவே நெஞ்ச வயல்களில்
விதைப்பறிவு விதைகளாக வேண்டும்-உணர்வீர்

மலையகமே தலையகமாம் அறிவினுக் கென்றே
மதிக்கப்பிறர் விதைந்துரைக்க வாழ்ந்து
காட்டுவீர்
கலைகளெலாம் வளரவேண்டுங் கல்வியி னோடே
கடல்கடந்தும் புகழ்நிலைக்கக் கற்றிட வேண்டும்
உலகிலுயர்ந்த தமிழரெனத் தேர்ந்தனர் எங்கள்
உத்தமநற் தலைவரைநீர் மறந்திட லாமோ?
விலையிலாத அறிவிலுயர்ந்த வாழ்வினைக்
காண்போம்
வரலாற்றில் மலையகத்தோன் பேரினைப்
பதிப்போம்

காங்கிரஸ் *15-11-93*

## மலை நதி

மளமளவென் றூறுகின்ற மாதர் கண்போல்
மலைமண்ணில் ஆங்காங்கே ஊற்றெ டுத்தே
சலசலத்துச் சமநிலத்தில் ஓடித் தாழ்வில்
சறுக்கிடவே சிதறியவை பிரிந்து சேர்ந்து
கலகலவென் றிரைந்துவிழுங் கற்க ளோடே
காற்றுடனே கலந்துநுரை யாக வீசி
பலபலவாய்ப் பிரிந்தேநற் புலனை எங்கும்
பங்கீடு செய்வதென்ன புதுமை யம்மா

## தூயபணி செய்திடநீ

## தூணிவு கொள்வாய்

தொழிலாளர் வாழ்வொன்றே உயிர்மூச் சாக்கித்
தொண்டுசெயப் பிறந்தவனே தொண்ட மானே
பழி சொல்லும் உலகுகண்டே அஞ்சி டாதீர்
பாதைமாறல் பயன்தருமேல் அவ்வழியேசெல்வீர்
எழுவானின் சூரியன் நீ தொழிலா ளர்தம்
இதயத்தின் இயக்கம்நீ இடையிற் தோன்றும்
வழிமாற்றம் எம்மவரின் நலனுக் கென்றால்
விதியெனினும் முயன்றதனை மாற்றி
வெல்வாய்

0 0 0

கேட்டதெல்லாம் தந்தார்கள் என்பதாலே
கடன்பட்டா ரன்றேநாம் உரிமை யைத்தாம்
கேட்டேநாம் பெற்றோம் நம் பலத்தால் ஆட்சிக்
கொடியுயர்த்தி நின்றவர்தான் கடன்பட்
டோர்கள்
நாட்டின்விதி மாறிவிட்டால் நாமென் செய்வோம்
நன்றியொடு நமதுபங்கை நாம்செய் தோம்நீர்
ஓட்டத்துக் கேற்றபடி துடுப்ப சைப்போம்
எதிர்நீச்சல் செய்யவிது நேரம் இல்லை.

0 0 0

நல்லபணி செய்பவர்கள் எவரென் றாலும்
நாமுமவர்க் குதவிடுதல் வேண்டும் நாட்டில்
எல்லோரும் விரும்புவது அமைதி யைத்தான்
எமது கடன் தோள்கொடுத்தல் மலைய கத்தின்
வல்லமையை உலகறியும் வழிந டத்தும்
விவேகமுள்ள தலைவனே நீ எஞ்சி யுள்ள
தொல்லைகளும் நீங்கவெவர் உதவு வாரோ
துணிந்தவர்க்கும் உதவியெம துரிமை காப்பாய்

தொழிலாளர் நலங்காத்தல் இ. தொ. காவின்
துணிவான கொள்கையதற் கிணங்க எந்தப்
பழி வந்து சூழ்ந்தாலும் புறத்தே தள்ளிப்
பாடுபடும் பெருந்தலைவா கொள்கை
தன்னைக்

குழிதோண்டிப் புதைத்தவர்கள் உந்தன் மீது
குறைசொல்லி மண்வாரித் தூற்றி னாலும்
ஒளி காட்டும் கலங்கரையாய் எங்கள் வாழ்வில்
உயிரூட்டத் துணைசெய்யத் துணிந்தே
செல்வாய்!

காங்ரகிஸ் 1-10-94

★ முன்போல் கவிஞர் மருதத்தின் கவிதைகள் காங்கிரஸ்ஸில் அவ்வளவாக வருவதில்லை என்ற குறையைப்போக்கும் விதத்தில் சென்ற காங்கிரஸ்ஸில் பிரசுரமான ''தூயபணி செய்திட நீ துணிவு கொள்வாய்'' என்ற கவிதை மிகத் தரமாக இருந்தது.

இரா. மாணிக்கம்
நூரளை

## மலை நாடு

உயர்ந்தமலை உச்சியிலே மேகக் கூட்டம்
ஊர்ந்துசெல ஆங்காங்கே ஊற்றெ டுத்தே
புயங்கமென வளைந்தோடுங் நதிகள் ஈழப்
பூமகளை நீராட்டிப் பூரிப் பெய்தும்
அயலிரண்டும் பெருவனங்கள் அழகு சேர்க்கும்
அதிலுறைந்து வண்டினங்கள் ராகு பாடும்
குயில்கூவிக் குரலெழுப்பும் குதிக்கும் மான்கள்
கோலஎழில் கொண்டதெங்கள் மலைநா டம்மா

## தாய்க்குலம் கண்திறக்க வேண்டும்

மலையகத்து மாதர்களே சிந்தி யுங்கள்
மலருமெதிர் காலத்தை நினைவிற் கொள்வீர்;
இலைபறித்து வாழ்வதுதான் விதியென் றெண்ணி
இருப்பதுபே ராபத்தாம் எனவு ணர்வீர்;
நிலைமாற வேண்டுமுங்கள் அறிவால் இந்த
நாட்டோடு சமுகநிலை உயர வேண்டும்;
தலையாய கடனின்று அதுவே மற்றோர்
தயவின்றி வாழுதற்கு தேர்வீர்; வெல்வீர்!

0 0 0

நாளெல்லாம் உழைத்துழைத்துக் கண்ட தென்ன
நம்முன்னோர் செய்ததுவும் அதனைத் தானே.
ஏழ்மைநிலை மாறியதா இல்லை இன்னும்
ஏனோதான் சிந்திக்கா திருக்க வேண்டும்?
வேளைக்கு ஊற்றுகின்ற கஞ்சி கூட
வயிற்றை முற்றும் நிரப்பாத போது நன்கு
வாழவழி கற்பதொன்றே எதிர்கா லத்தை
வளமாக்கும் என்பதனை உணர வேண்டும்!

0 0 0

சொந்தமென்று நமக்கெங்கே நிலங்க ளுண்டு
தொடர்ந்திருக்க வீடுண்டோ எதிர்கா லத்தின்
சந்திக்கும் அந்நிலைதான் இனியும் நாங்கள்
சிந்திக்கா திருப்பினதைத் தெளிதல் வேண்டும்;
வந்தவர்கள் என்றுபிறர் பேசு கின்ற
வரட்டுவே தாந்தமினி ஒழிவ தென்றால்,
சொந்தமென்று நமக்குமெலாம் இருக்க வேண்டும்
சிறுசிறுநற் கைத்தொழில்கள் பயில வேண்டும்!

குடிசைக்கைத் தொழிலெங்கள் மாத ருக்குக்
கற்பித்தல் கடனாகும் வருவாய் ஓங்கும்;
மிடிமைநிலை நிச்சயமாய் மாறும் எங்கள்
மாதரின்கை கூடஇனி ஓங்கும் நாங்கள்,
குடியுரிமை பெற்றஇந்த நாட்டின் மக்கள்
குறைவில்லை உரிமையெல்லாம் நமக்கு உண்டு;
தடைவரினோ தாண்டிடுவோம் தமக்குத் தம்கை
தாமுதவும் என்பதனை நினைவோம்;
வெல்வோம்!

★ ★ ★

''சிறுதுள்ளி பெருவெள்ளம் சொற்ப சொற்பம்
சேமித்தாற் போதுமது சேர்ந்து சேர்ந்து,
நிறைவான காரியமொன் றியற்றும் போது
நிதியாக மாறுமதை வாழ்வில் தாங்கும்
குறைகளைய எதிர்காலச் சுபீட்சங் காணுங்
கருத்தோடு முதலிட்டால் நாமும் ஓர்நாள்
பிறர்போல சகலதும்பெற் றுயர்வு கொள்ளும்
பேறுவரும் நெஞ்சிலிதை நிறுத்து வீரே

காங்கிரஸ் 1-12-94

## விமோசனம் வேண்டும்

உழைப்பாளி வர்க்கத்தின் உதிரத்திற் தானடா
உயிர்வாழும் உலகம் இன்று - அவன்
உடல்சோர்ந்து ஒருபொழுது ஓய்வுற்றால்
தடுமாறும்
உலகமெனச் சுழலும்பந்து

★ ★

பிழைப்போடு தான்வாழும் புவிக்(கு)
ஊட்டம் அளிக்கின்ற
பெருமகன் அவன் தானடா -- இதைப்
புரியாத பேர்புத்தி இல்லாத பேரடா
புரிந்தாலும் உதவாரடா.

★ ★

ஒரு வேளை வயிராற உண்டிடப் போதாத
ஊதியம் தருவாரடா -- அவர்
தெருவோரம் வீசிடும் எச்சிலைச் சேர்த்தாலே
ஒருவாரம் உணலாமடா.

★ ★

மலைமேவும் பனிதோய்ந்து மிளிர்கின்ற
தளிர்காலை
மறைகின்ற நிலைபோலுமே -- நாமும்
பலியாகப் பிறர்வாழும் பரிதாப நிலையாரும்
பாராத புறமாகுமே.

★ ★

சிலைமேலே சிலையாகிச் சலியாது உழைக்கிறோம்
சிந்திப்பார் எவராமடா -- சாப
அலைமோதி இவரழிந் திடுமுன்னர் விமோசனம்
அளித்தாலே பிழைப்பாரடா.

காங்கிரஸ் 01-01-1995

## கோலோச்சும் குறிஞ்சி அழகு

மலையோடு மலைசார்ந்த குறிஞ்சி மண்ணின்
மனதீர்க்கும் அழகுதனைக் கேழு மையா
கலைமிளிரும் அவைகாணக் கண்கள் கோடி
காணாதே பிறவியொன்றும் போதா தையா,
சிலைபோல நின்றதனை நோக்க வைக்கும்
செப்பரிய காட்சிகளைப் பார்வை யென்னும்
வலையுள்ளே அடக்கிடத்தான் கூடு மாமோ
வார்த்தைகளு மில்லையையா கவிதை பாட!

0 0 0

நிலையாக அசையாது வானைத் தொட்டு
நிற்கின்ற குன்றங்கள் அவற்றின் மீதே
அலையலையாய்த் தவழ்கின்ற வெண்மே கங்கள்
ஆங்காங்கே குவிந்தபஞ்சுப் பொதிகள் போன்றாம்
இலையோடு இலையெஃகி மரங்க ளாங்கே
இலையென்னும் வாறுசெழித் தழகு காட்டும்
''இலை இது போல் ஆகாகா'' என்றே நெஞ்சம்
இன்புற்றே நிற்காதோர் குருட ரையா!

0 0 0

குஞ்சரங்கள் ஒன்றையொன்று தொடர்ந்தாற் போலும்
கொடும்பாலை ஒட்டகத்தின் திமில்கள் போலும்
வஞ்சியரின் வாலையிள நெஞ்சம் போலும்
வான்தவழும் மழைமேக முட்டம் போலும்
அஞ்சாத மறவர்களின் புயங்கள் போலும்
ஆடுகின்ற மயிற்றோகை வடிவம் போலும்
நஞ்சுண்ட சிவனாரின் கண்டம் போலும்
நம்நாட்டின் நாப்பண்ணே மலைக ளையா!

ஆங்காங்கே மலைமீது ஊற்றெ டுத்தே
அழகாக வெண்நுரையை எங்கும் வீசி
ஓங்கொலியோ டுருண்டுதரை மீது வீழும்
உயர்குன்றப் புனல்வீழ்ச்சி எங்குங் காண்பாய்
பாங்காக வளர்ந்தமலர்ச் செடிகள் பூத்துப்
பசுமை கொஞ்சக் காட்சிதரும் இவற்றைக் கண்டு
ஏங்காத மனங்கூட ஏங்கும் அந்த
எழிற்கோலம் மனம்விட்டே அகலா தையா!

★ ★

இயற்கைதந்த அழகோடு இன்னு மின்னும்
எழில்சேர்க்கும் எம்மவர்கள் உதிரஞ் சிந்திப்
பயிரிட்ட தேயிலையுங் கொக்கோ போன்று
பற்பலவும் ஆங்காங்கே மலையிற் காணும்
அயர்வில்லா துழைக்கின்ற தொழிலா ளர்கள்
அணிவகுத்துச் செல்லுவதும் அழகே தம்மின்
துயர்மாளப் பாடுபட்டுத் துயரே மிஞ்சத்
தளிர்பறிக்கும் பெண்டிரின் கூட்டத் தோடே.

★ ★

ஒருவேளை கஞ்சியைத்தான் உண்டிட் டாலும்
ஒதுங்கியொரு மூலையிற்றான் சுருண்டிட் டாலும்
மருவுமிட ரத்தனையும் நெஞ்சிற் தாங்கி
மண்செழிக்கப் பகலிரவாய் உழைத்திட் டாலும்
ஒருபுறத்தில் தனித்திருந்தே ஓரீர் நாழி
ஒன்றிவிட்டால் மலையெழிலில் துன்ப மெல்லாம்
கருகியழிந் துள்ளத்தே புத்து ணர்வு
கரையொடித்துப் பாயாதோ-கவல் மாளாதோ?

காங்கிரஸ் 1-4-95

## பசுந்தளிரின் பனி முத்துக்கள்

முத்துமுத்தாய்த் தளிர்களிலே மின்னு கின்ற
மணிகள்பனித் துளிகளல்ல கொழுந்து கொய்ய
நித்தமுமே மலையேறும் மலைய கத்து
நங்கையரின் நயனவழி நீரே அன்னார்
தத்தமது விதியெண்ணி நெஞ்சி னுள்ளே
தவிக்கின்ற தவிப்பெல்லாம் கண்ணீ ராகி
நித்தநித்தம் செடிகளிலே பொழித லாலே
நிறைந்தெங்குங் காணுதவை பனிபோ லாமே!

0 0 0

தேடுவது உண்பதற்கே போதா தென்று
துயருறுந்தாய் மார்வடிக்குங் கண்ணீர் மக்கள்
நாட்டத்தைச் சிறிதளவும் நிறைவு செய்யும்
நிலையற்ற மாதர்தம் கண்ணீர் மற்றும்
ஏட்டறிவை தொடரவழி யற்ற மைந்தர்
ஏக்கத்தால் அன்னையர்கள் வடிக்குங் கண்ணீர்
கூடாத மணவாழ்வில் தனித்தே நிற்கும்
கன்னியரும் பெற்றவருஞ் சிந்துங் கண்ணீர்

0 0 0

குடித்துவிட்டு வீடுவரும் கணவன் செய்யும்
கொடுமைதாங்க இயலாதோர் சொரியுங் கண்ணீர்
படித்தாலுந் தொழிலற்றுக் கூடை தூக்கும்
பாவத்தை நினைந்தஇளம் பெண்கள் கண்ணீர்
கொடியபனிக் குளிரினிலே தாய ணைப்பில்
குளிர்காய்ந்தே துயின்றசிறு மழலை தன்னை
விடியுமுன்னே தவிக்கவிட்ட இளந்தாய் மாரின்
விழிசிந்தும் தாய்மைமன ஏக்கக் கண்ணீர்

உடுத்தஉடை மாற்றத்துணி யற்ற பேரும்
உதரஅழல் பொருக்கவிய லாத பேரும்
படுத்துறங்கிக் களைநீங்க இடமற் றோரும்
பருவஎழில் கருகமனம் உருகும் பேரும்
எடுத்தகடன் இறுக்கவழி யற்ற பேரும்
ஏனுலகிற் பிறந்தோமென் றெண்ணும் பேரும்
வடித்த கண்ணீர் தான்பசிய தளிர்கள் மீது
வீழ்ந்திலங்கும் பனிமுத்தாய் வேறொன் றில்லை!

0 0 0

கூடியிவை அத்தனையும் ஒன்று சேர்ந்தே
கொதிப்படைந்தே சூரியனால் ஆவி யாகி
வாடாது தேயிலையின் செடிகள் வாழ
வான்நோக்கி உயர்ந்த தாங்கே குளிர்ந்தே மீண்டும்
நாடும் புவி மழையெனவே நிலத்தில் வீழ்ந்து
நதியாகும் மலைப்பயிர்க்கு அமுத மாகும்
கோடிகோடி குவிந்தாலும் மலைநாட் டோரால்
குறைநீங்கா வாழ்வவர்க்கே சொந்த மாமே!

காங்கிரஸ் *15 - 10 - 95*

## பத்திரிகை படித்திட வேண்டும்

நாட்டுநலம் அறியமலை நாட்டவ ரெல்லாம்
நாளாந்தம் தினத்தாள்கள் படித்திட வேண்டும்
வீட்டிலுள்ள மாதர்களும் வேலை செய்வோரும்
வசதிக்கேற்ற படிதினம் வாசிக்க வேண்டும்
ஏட்டறிவு இலாதோரும் எழுத்தறிந் தோறின்
இசைவுநாடி நிலைமைகளைக் கேட்டறிந் திடனும்
பூட்டிஇருள் சூழ்ந்தமனக் கோட்டைக ளெல்லாம்
புதியபுதிய சேதிகளால் துலங்கிட வேண்டும்

0 0 0

நமதுநாட்டில் நிகழுகின்ற சேதிகள் என்ன
நம்மைப்பற்றி நிகழ்காலக் கருத்துக ளென்ன
அமைதியற்ற புலன்களிலே நடப்பவை யென்ன
அரசஎதிர் கட்சிகளின் போக்குகள் என்ன
சமகால வாழ்வுமுறைப் பயண நெரிசலில்
தொழிலாளி நிலையென்ன பிறர்நிலை யென்ன
நமைநாமே அறிதலொடு பிறர்நிலை அறிய
நாளாந்தம் பத்திரிகை படித்திட வேண்டும்

0 0 0

ஆபிரிக்க நாட்டில்நடக்கும் அதிசய மென்ன
அமெரிக்கரின் வாழ்வில் தோன்றும் மாறுத லென்ன
தாபரிக்க யாருமற்று வறுமையின் பிடியில்
துயருறும் ''ஏ தோப்பியரின்'' கொடுமைதா னென்ன
சாபவிமோ சனமிலாத கேடென உலகின்
சரித்திரத்தில் கறைபடிக்கும் போர்வெறி யென்ன
கோபங்கொண்டு சீறும்இயற்கைக் கோரங்களாலே
குடிகள்படும் துயரினையும் அறிந்திட லாமே

அரசியலை அறிந்திருக்க வேண்டுமே நம்மோர்
அன்றாட நிகழ்வுகளை புரிந்திட வேண்டும்
சரியான வேளைவரும் போதினில் எம்மோர்
சக்திதனைக் காட்டநமைத் தயார்ப டுத்தணும்
உரியவாறு அனைத்துமறிந்து வைத்திருந் தாலே
ஏற்றபோது ஏற்றதனைச் செய்தல் கூடுமே
அரிமாவும் மண்டியிடும் காலம் நம்பதம்
அரசியலில் உறுதியுற ஆவன செய்வோம்

*0 0 0*

சுற்றியுள்ளோர் சேர்ந்துதினம் ஒன்றென் ருயினும்
தரமான தினசரியைத் தெரிந்து வாங்கணும்
ஒற்றுமைக்குப் பங்கமின்றி ஒருவர்பின் ஒருவர்
உலகளாவுஞ் சேதிகளை ஓர்ந்த றிந்திடணும்
மற்றவரும் படித்தறியும் வாய்ப்பை அளிக்கணும்
மனத்திலுதிக்கும் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளணும்
சொற்பமேதான் பணவிரயம் பலனை நோக்கிடில்
செலவினைப்போல் பலமடங்கு அதிக மாகுமே

காங்கிரஸ் *01 - 09 - 95*

## பனிமலையில் பூபாளம்

வானுயர்ந்த மலைகளிலே ஊற்றெடுத்து
வளைந்துவளைந் தோடுநதி ஓசை பூவின்
தேனுகர்ந்த வண்டுமலர்ப் பொய்கை சுற்றித்
திரிந்தெழுப்பும் ரீங்காரம் ஆங்கு வாழும்
கானகத்துக் குருவியினம் செவியி னிக்கக்
கூடிமகிழ்ந் தெழுப்புகின்ற குரல்க ளெல்லாம்
ஊனமிலா மனங்கொண்ட மலைமாந் தர்க்கு
உணர்வூட்டும் பூபாள ஓசை தானே

சிற்றோடை மருங்குகளில் வளைந்தே காணும்
தங்கவண்ண மூங்கில்களை வண்ட றுக்க
சுற்றிவரும் மலைத்தென்றல் அதனூடேகிச்
செவிக்கினிய ஓசையெழு வாறு செய்யும்
பற்றைபற்றை யாய்ச்செழித்த தேயி லையில்
படிந்திருந்த பனித்துளிகள் சொட்டுச் சொட்டாய்
முற்றியாங்கு காய்ந்துவீழ்ந்த சருகிற் கொட்டி
மகிழ்வூட்டும் பூபாள ராக மாகும்

சோவென்று பொழிகையிலே மேள தாளம்
சற்றடங்கிப் பெய்யுங்கால் முரசம் சோர்ந்தே
தூவானம் அடிக்கையிலே மோர்சங் கின்னுந்
தொடர்ந்துசற்றே உரத்தாலோ உடுக்கை காற்றுக்
கூவியொன்றி வீசுகையில் நாதஸ் வரம்
கொட்டிடுங்கால் துளிதுளியாய் ஜலத ரங்கம்
யாவுமிவை மழைசெய்யும் கோலம் எங்கள்
எழில்மேவும் மலைநாட்டின் பூபா ளங்கள்

*22-10-95*

# குறிஞ்சி அழகு

நாகவெளி தனிலேவெண் நாகங்கள் ஒன்றி
நாகமணி யொக்கநிலம் நல்லொளியை உமிழ
நாகமுடி தொடங்குநதி நாகவுடல் மீதே
நாகமெனச் சுற்றிவளைந் தோடுகின்ற கானில்
நாகமொன்று நாகமர நிழலிலதன் துணையாம்
நாகமொடு குலவுமுயர் நாகக்கிளை மீதே
நாகங்கள் தாவுமதன் நர்த்தனங்க ளாலே
நாகஇலைப் பூச்சொரியும் நாகமணி நாடே

நாகம் ;

ஆகாயம், வெள்ளி, நாகமணி, மலைமுடி, மலை, பாம்பு
யானை, புன்னை மரம், குரங்கு

## அன்னை வெளியீட்டக வெளியீடுகள்

1. இசைவருள் மாலையும் மக்களுக்கு இதோபதேசமும் — 1979
   புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன்

2. பாலையில் வசந்தம் — 1989
   "ஜின்னாஹ்"

3. முத்து நகை — 1989
   "ஜின்னாஹ்"
   (கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசு பெற்றது)

4. மஹ்ஜபீன் காவியம் — 1991
   (புதுக்கோட்டை முதலாம் இஸ்லாமிய தமிழ்ச் சிற்றிலக்கிய மாநாட்டில் வெளியிடப் பட்டது)

5. ஷேக்ஸ்பியர் ஒரு ஜீவநதி
   றோமியோ ஜூலியட் — 1992
   பல்கலைவேந்தர் சில்லையூர் செல்வராசன்

6. சுழற்சிகள் — 1994
   தாஸிம் அஹமது

7. புனித பூமியிலே காவியம் — 1995
   "ஜின்னாஹ்"

8. பனிமலையின் பூபாளம் — 1995
   மருதம்(ஜின்னாஹ்)

## பிழையும் சரியும்

| பக்கம் | பாடல் | வரி | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 1 | 1 | போல தாழ்ந்து |
| 1 | 2 | 7 | ஒத்துவாழும் |
| 1 | 3 | 6 | இன்னுமிடங் |
| 2 | 2 | 7 | போற்றிடுவோம் |
| 3 | 1 | 1 | மலையகத்தில் |
| 3 | 1 | 2 | சொல்வேன் |
| 3 | 1 | 4 | ளாதிருக்க |
| 3 | 2 | 7 | உறுதியொன்றை |
| 3 | 3 | 1 | சொல்லவொரு |
| 5 | 1 | 1 | திருந்தொவ்வோர் |
| 5 | 1 | 2 | தாவிப் |
| 5 | 1 | 3 | பிடிபிடியாய்ப் |
| 5 | 1 | 7 | கொள்வீர் |
| 5 | 2 | 2 | பசுந்தளிர்க |
| 6 | 3 | 3 | வேரோடு |
| 6 | 3 | 3 | கண்டிடும் |
| 6 | 3 | 3 | திறன்கொண்ட |
| 7 | 2 | 3 | மலைசெழித் |
| 9 | 1 | 4 | போலும் |
| 9 | 2 | 1 | ஒரு நாளும் |
| 11 | 2 | 6 | மேருபோல் |
| 15 | 1 | 8 | விழைவா |
| 22 | 3 | 5 | சிலம் |
| 23 | 1 | 5 | ஒளியும் |
| 27 | 2 | 1 | கரசுள்ளே |
| 34 | 1 | 7 | தூக்கிக் |
| 41 | 1 | 4 | கண்டுயர்ந்தோர் |
| 41 | 2 | 4 | செய்குவாய் |
| 44 | 2 | 2 | நிழல்பரப்பும் |
| 45 | 1 | 4 | தான்செய்ய |
| 48 | தலைப்பு | | செய்வோம் |
| 50 | 2 | 2 | மிருந்து |
| 58 | தலைப்பு | | துணிவு |

S. GUNARATNAM F.B.E.M.
RETIRED SECRETARY
MINISTRY OF REGIONAL DEVELOPMENT
GOVERNMENT OF SRILANKA
CONSULTANT PLANNING AND FOREIGN TRADE

கிழக்கு இலங்கையின் இயல்பான கவித்துவ வளனும் தந்தை புலவர்மணி ஷரிபுத்தீன் வழி கண்ட இலக்கிய மரபின் செழுமையும் பெற்ற கவிக்கொழுந்தே ஜின்னாஹ் என்ற இக் கவிவேந்தன். சமகால இலங்கையின் ஒப்பாரும் மிக்காரும் அற்ற இக்கவிக்குரிசில் தொட்டதெல்லாம் பொன்னாகிறது. அற்புதக் கவிதைத் திறனும் ஆழ்ந்தகன்ற புலமையும் வாய்க்கப் பெற்றதனாலன்றோ பழமையும் புலமை மரபும் கொண்ட கொழும்புத் தமிழ்ச்சங்கம் இலக்கியச் செயலனாகக் கண்டு போற்றி மகிழ்கிறது. பாரம்பரியம் மிக்க தமிழ் இலக்கிய உலகு ஜின்னாஹ் வினால் புதுப்பொலிவும் வனப்பும் பெறுக.

இலக்கியச் செம்மல்
செ. குணரத்தினம்
இளைப்பாறிய அமைச்சுச் செயலாளர்
தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

WHITE DOT GRAPHICS